விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 6 ரவி அவ் 22 இதழ் 137
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19 1-82

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

Coming to you every Saturday, beginning January 30th

SATURDAY REVIEW

All advance Annual subscriptions to
Kalai Nilayam Ltd.
303, K. K. S. Road,
Jaffna.
Rs. 120/- (including postage)
Cheques payable to
Kalai Nilayam Ltd.

## யு.எஸ் ராஜதந்திரி சுட்டுக் கொலை!

பாரிஸ், ஜன. 18

அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் பிரான்சில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாரிசில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணிபுரியும் லெப்டினன்ட் கேணல் ஜேம்ஸ் சார்ள்ஸ் றே என்ற இராணுவ அதிகாரியே சுட்டுக் கொலைசெய்யப்பட்டவராவார்.

கடந்த நவம்பர் மாதம் 12ம் திகதி பிரான்சின் அமெரிக்கத் தூதுவரைக் கொலை செய்யமேற்கொள்ளப்பட்ட முயற்சி போன்றதே இது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

★ இன்று நடைபெறும் அரசு-கூட்டணி சந்திப்பு:

# உறுதிமொழிகளை நிறைவேற்ற கூட்டணி வலியுறுத்தும்

## முக்கிய கோரிக்கைகளுக்கு 'காலக்கெடு கோருவர்

(கொழும்பு)

**இன்று நடைபெறும் அரசு கூட்டணி உயர்மட்டப்பேச்சுக்களில், கூட்டணி சில முக்கிய கோரிக்கைகளை அரசிடம் வலியுறுத்தும் என்றும், இக் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசிடம் காலஎல்லையையும் கூட்டணி கேட்கும் என்றும் தெரியவருகிறது. ஏற்கனவே அரசு அளித்த உறுதிமொழிகளை உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும் என்றும் கூட்டணி கோரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

கூட்டணி எம். பிக்களின் அவசர கூட்டமொன்று நேற்றுக்காலை எதிர்க்கட்சி முதல்வரும் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் இன்று நடைபெறும் அரசு— கூட்டணி உயர்மட்டப் பேச்சுக்களில் முக்கியமாக வலியுறுத்தப்பட வேண்டிய கோரிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

ஏற்கனவே விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஊர்காவல் படைகளை அமைப்பதில் சில திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நேற்றுநடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு, இன்றைய உயர்மட்டப் பேச்சுக்களில் சமர்ப்பிக்கப்படுவதற்கு திருத்தங்களும் தயாரிக்கப்பட்டன.

தமிழ்ப் பகுதிகளில் வேலைவாய்ப்பு பற்றி இன்றைய கூட்டத்தில் வலியுறுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அரசு—கூட்டணி உயர்மட்டப்பேச்சுக்களில் ஏற்கனவே இணக்கம் கண்டவிஷயங்களை தாமதமின்றி அமுல் நடத்துமாறும் இன்று கூட்டணி கேட்டுக்கொள்ளும்.

இன்று மாலை நடைபெறும் அரசு — கூட்டணி சந்திப்பில் புன்னக்குடாவிவகாரம், நெடுந்தீவு வெடியரசன்கோட்டை பௌத்த தூபிகள் அமைப்பு, வவுனியா புத்தர்சிலை போன்ற விவகாரங்கள் முக்கியஇடம் பெறும். (ம)

## தமிழ் இளைஞர் பேரவை விடுதலைஅணி செயற்குழு இன்று கூடுகிறது

[பண்டத்தரிப்பு]

தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணியின் செயற்குழுக்கூட்டம் இன்று யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

கல்வி வெள்ளை அறிக்கை, திருகோணமலையில் அமெரிக்க தளம் அமைத்தல் ஆகிய பல முக்கிய விஷயங்கள் இக் கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயங்களில ஒத்த கருத்துடைய ஏனைய இயக்கங்களையும்ஒன்றுசேர்த்து எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நடாத்துவது பற்றியும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## பாராளுமன்ற திறப்பு விழா ஜனதிபதி முடிவு செய்வார்

### பெப். 19ல் சபாநாயகரிடம் கையளிப்பு

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்த்தன புரவில் கட்டப்பட்டுள்ள புதிய பாராளுமன்றத்தின் திறப்பு விழாவுக்கான திகதியை ஜனதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன விரைவில் அறிவிப்பார்.

அடுத்த மாதம் 19 ம் திகதி புதிய பாராளுமன்றக் கட்டிடம் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவினல்சம்பிரதாயபூர்வமாக சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும்.

இப்பாராளுமன்றக் கட்டிடத்தை கட்டிய ஒப்பந்தக்காரர்கள் இக்கட்டிடத்தை நாளை உள்ளூராட்சி அமைச்சிடம் கையளிப்பர். இக்கட்டிடத்தை இந்தஒப்பந்தக்காரர்களே ஓராண்டு காலம் பராமரித்து வருவார்கள்.

புதியகட்டிடத்திற்கு நேற்று பத்திரிகை நிருபர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

புதியபாராளுமன்றத்திறப்பு விழா நடைபெறும்வரை இப்போதுள்ள பாராளுமன்றத்திலேயே சபைக் கூட்டங்கள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பரந்தன் பெண் கொலை கொள்ளை: இன்று தீர்ப்பு?

(யாழ்ப்பாணம்)

பரந்தன் இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம் கொலை—கொள்ளை வழக்குத் தீர்ப்பு, யாழ். மேல் நீதிமன்றத்தில் இன்று வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பரந்தனில் குடியேறியிருந்த இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம் என்பவரை 78ம் ஆண்டு அக்டோபர் 25ம் திகதி வேலு செல்வராசா (31 வயது) என்பவர் கொலை செய்ததாகவும், 6 பவுண் தாலிக் கொடியைக் கொள்ளை அடித்ததாகவும் குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

7 நாட்களாக இவ்வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். ஜாமில் முன்னிலையில் நடைபெற்றது.

எதிரி சார்பில் சட்டத்தரணி செல்வி கே. வி. இராயப்பு

[8ம் பக்கம் பார்க்க]

## ஒத்திவைக்கப்பட்ட தண்டனையை மீறினர்; 30 மாத கடூழியம்!

(யாழ்ப்பாணம்)

இருவழக்குகளில் 18 மாதம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைபெற்றவர் மீண்டும் களவொன்றில் அகப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை மண்கும்பானைச் சோந்த நடராசா

(8ம் பக்கம் பார்க்க)

**திருமண அழைப்பு**

**கணேசன் - அமிர்தினி**

**மணமகன்: கந்தவனம் கணேசன்**

**மணமகள்: நடராஜா அமிர்தினி**

**இடம்: நல்லூர் சிவன் கோவில்**

**காலம்: 20—01—1982 புதன்கிழமை**
**காலை 6-30 — 7-30 மணி**

**வரவேற்பு உபசாரம்: 286, நாவலர் வீதி,**
**மணமகன் இல்லம் பிற்பகல் 5-00 மணி**

உறவினர்களையும், நண்பர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன்

2019 கந்தவனம் மகேசன்

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை

## 3-ம் கட்ட வேலைத்தளத்தில் மற்றுமொரு விபத்து: ஒருவர் ஸ்தலத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்ட வேலைப்பகுதியில் நேற்றுமுன் தினம் நிகழ்ந்த விபங்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானர். இருவர் பலத்தகாயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றுமொருவர் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த என். பூலோகநாதன் (21 வயது) என்பவரே மரணமடைந்தவராவார்.

எஸ். அருட்பிரகாசம் (21 வயது) கரவெட்டி, ஏ. சிதம்பரநாதன் (60 வயது) காங்கேசன் துறை ஆகிய இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

3வது கட்ட வேலைத்தளத்துக்கு, கற்குளிப்பகுதி (குவாரி) யிலிருந்து 'லோட்டர்' வாகனத்தில் இவர்கள் நால்வரும் வரும்போது வாகனம் தடம்புரண்டதால், இந்த விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

மப

**மணிவாக்கு**

ஒன்ருய்ப் பலவாய் உலகமெங்கும் தானேயாய்
நின்ருய் ஐயாவெனநீ நீங்கற் கெளிதாமோ.

— தாயுமானவர்

# நமது நோக்கு

## கள்வர் குகைக்கு கட்டாயபாடம்

சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூவை நினைக்கும் போதெல்லாம், ''(உ)ம் என்ருன் தூக்கியடித்தான்'' என்ற ஒரு நாடோடி வாசகம் நினைவுக்குவருகிறது.

ஒரு சிறு நகரத்தைப் பெரிய நாடாக்கி உலக சமுதாயத்திலேயே சிங்கப்பூரின் பெயரைப் பிரபல்யமாக்கிய பிரதமர் கையாளும் கொள்கைகளெல்லாம் உடனடி விளைவுகளைக் கொண்டதே!

மின்னல் வேகத்தில் எதனையும் சிந்தித்தோ, சிந்திக்கத் தயங்காமலோ, செயலாற்றும் திறன்மையைப் பெரிதாக மதிக்கின்ற பிரதமர் ஜனநாயக கோட்பாட்டின் 'எதிர்க்கட்சி'யை விரும்பாதது வியப்பல்ல.

சில காலத்துக்குமுன் சிங்கப்பூரின் பொருளாதார உயர்ச்சிக்கும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் ஆங்கிலம் அவசியமென்றும் அதன் தரம் உடனடியாக உயர்த்தப்படவேண்டுமென்றும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். இதற்கு இங்கிலாந்திலேயே இருந்து ஆசிரியப்படை ஒன்றை வரவழைக்கவும் தயாரானர்.

தொழில் மேம்பாட்டிலும் நிர்வாகத் திறமையிலும் செழித்துவந்த சிங்கப்பூருக்கு ஒரு கிரக மாற்றம் ஏற்பட்டதுபோல் தெரிகிறது.

நாட்டில் திருட்டுக்கள் பொதுவானவை: இராணுவத்தில் மட்டுமல்ல பாடசாலை மாணவர்கள்கூட திருடர்களாகத் தொழில் புரிகின்றனர். பாடசாலைகள் கள்வர்களின் குகையாக மாறுகின்றன என்ற குற்றம் சிங்கப்பூரின் நற்பெயரைக் கெடுத்துவருகிறது.

இதனை எங்கள் நாட்டு ஜனதிபதி அறிந்தால், ஆறுதல் அடைவாரோ அல்லது ஏமாற்றம்கொள்வாரோ என்று கூறுவது கடினம். எடுத்ததற்கெல்லாம் சிங்கப்பூரை ஓர் உதாரண புருஷராகக் கொண்ட எங்கள் ஜனதிபதி இந்த நாட்டின் பொருளாதார நிர்வாக ஆட்சிமுறை சிங்கப்பூரிலிருந்து படிக்கவேண்டியது உலகளவு என்று சொல்லி வந்தார்.

'கள்வர்குகை' என்பது சிங்கப்பூர் ஒன்றுக்குத்தான் புதிய விலாசமாகக் கொள்வது நியாயமா?. சிங்கப்பூர் பிரதமர், கல்வி அமைச்சர் போன்ற தலைவர்களின் விழிப்புணர்வையும், பரபரப்புடன் பிரச்னைகளை அணுகும் முறையையுமே இது காட்டுகின்றது.

இதற்கு நேர்மாருன இரண்டு இலங்கைப் பொது ஜன தொடர்பு சாதனங்கள் எவை என்று ஒருவர் கேட்கின், (1) இலங்கை வானெலி தேசிய ஒலிபரப்பு, (2) ஆங்கிலத் தினசரி ஒன்று—ஆகிய இரண்டையும்கூசாமற் குறிப்பிடலாம்.

இந்த நாட்டில் தேனும் பாலும் ஊற்றெடுக்குதென்றும், கள்வர் குகை, பயங்கரவாதம் என்ருல் அது வடக்கில் வந்தேறு குடிகள் மத்தியில் நிலவும் இழிதொழில் என்றும் கூறக்கூசமாட்டா இவ்விரு ஸ்தாபனங்களும்.

மகாவலி தொடக்கம், கூட்டுறவு ஸ்தாபனங்கள் வரைக்கும் 'கள்வர் குகை' என்பதைத் தாராளமாக வர்ணிக்க என்றுமே தயங்குவார்கள். எனவே குறைகளுக்கு நிவர்த்தி காண்பது முயற்கொம்பு.

அது அவ்வாருக, கள்வர் கூட்டத்துக்கு (குகைக்கு) என்ன மருந்தைக் கண்டு பிடித்திருக்கிருர் சிங்கப்பூர் கல்வி அமைச்சர்? சமய பாடம் கட்டாய பாடமாக எல்லாப் பாடசாலைகளிலும் படிப்பிக்கவேண்டுமென்பதே!

மிகச்சிக்கலான கேள்விக்கு ஒரு மிக எளிதான விடைபோல் இது காணப்படும். இருப்பினும் சிங்கப்பூர் கல்வி அமைச்சர் டாக்டர் கோ ஒரு குழந்தை உள்ளம் படைத்தவர் போல் தெரிகிறது.

ஒழுக்கசீலரான சிங்கப்பூரியர்களை உருவாக்க, சிறந்த மிகவும் நம்பிக்கையான வழி சமயக் கல்வி என்பது அவருடைய திடமான கொள்கை.

சமயம் ஒரு நல்வாழ்க்கை முறை; மனித சமயத்தை மையமாகக் கொண்டுவிளங்கும் நெறிஎன்று கொள்ளும் நாம் இந்தக் கொள்கையை கேலிபண்ணவோ அல்லது நிராகரிக்கவோ முற்படவில்லை.

இருப்பினும் சமயபாடம் கட்டாயபாடமாக போதிக்கப்பட்டால் காலகதியில் நாடு ஒழுக்க சீலர்களின் உறைவிடமாக மாறிவிடுமென்று நம்புவது விவேகமானதாகத் தெரியவில்லை.

சமயத்தின் பேரில் என்னென்ன கொடுமைகள் நடந்தன; நடக்கின்றன, நடக்குமென்று ஆராய்வதானல் நடுக்கமுற்று 'ஷாக்' என்னும் பயங்கரநோயினல் பரலோகம் செல்ல நேரிடும்.

சமயம் மக்களைப் பிரிக்க, அவர்களிற் பலருக்கு பொழுது போக்காக உதவ, ஆட்சியாளரின் கொடுங்கோலுக்கு ஆதரவளிக்க- இன்னேரன்ன தீமைகளுக்கும் உதவுகின்றது. விஞ்ஞானம் போல சமயம் என்ற சொல்லும், ஆக்கத்தையும் அழிவையும் உண்டு பண்ண வல்லது.

எனவே சிங்கப்பூர் ஆட்சியாளரின் நன்னேக்கம் பிள்ளையாரைப் பிடிக்க பெருச்சாளியாக மாருது நற்பயன்அளிக்க அதற்குரிய வழிவகைகளைக் கண்டு பிடிக்கவேண்டும்.

வேறு சமயங்களில் வேறுபாடு உண்டாயினும், இலட்சிய ஒருமைப்பாட்டைக் கண்டுபிடித்து அதனை வாழ்க்கையில் முரண்படாது ஒழுகும் சிறந்த ஆசிரியர்கள் கற்பிக்கமுடியுமானல் கொள்கை ஓரளவிற்காவது பலனளிக்கும்.

பல்வேறு இனத்தவர் மதத்தவர் வாழும் நாட்டில் சமய சமரசம் இன்றியமையாதது. தத்தம் சமய நெறியில் ஆழ்ந்த பற்றும், தோய்ந்த அனுபவமும் கொள்ளுதல், அதே நேரத்து, பிறசமயங்களிடத்தில் வெறுப்புணர்வின்றி ஈடுபாடுகளைக் காட்டுதல்—இத்தகைய பரந்த உணர்வு வளர ஆவனசெய்தால் கட்டாய பாடம் கள்வரைக் காட்டிக் கொடுக்கவல்லது.

# சாவகச்சேரி நகரசபை விரைவில் மாநகர சபை அந்தஸ்துப் பெறும்?

## நவீனபஸ் நிலையத்திறப்பு விழாவில் பாராட்டு

(சாவகச்சேரி)

'பெரும் பணச்செலவுடன் அமைக்கப்பட்ட இந்த பஸ் நிலையத்தைப் பாதுகாப்பாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பது மக்கள் பொறுப்பு, இந் நிலையத்திற்கு ஒருபுறம் நவீன சந்தையும் மறுபுறம் நவீன நகர மண்டபமும்அமையவிருக்கிறது. இந்த பஸ் நிலையத்தை அமைப்பதற்கு நகர சபையின் முன்னுள் தலைவர் திரு, திரவியநாயகமும் தற்போதைய தலைவர் திரு. மயில்வாகனமும் பெரும்பங்கு கொண்டு உழைத்தனர்' என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் சாவகச்சேரி நவீன பஸ் நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர். நகர முதல்வர் திரு. க. மயில்வாகனம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது,

சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினம், வட பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா, வடபிராந்தியபோக்குவரத்துச் சபை முகாமையாளர் திரு. என். சிறீஸ்கந்தராசா, பிரபல கல்லூரி அதிபர்கள், நகர சபை உறுப்பினர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் உட்படப் பெருந்தொகையானேர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

திரு. வ, ந. நவரத்தினம் எம். பி. தமது ஆசியுரையில், 'சென்ற நகரசபைத் தேர்தலில் ஆட்சிப்பொறுப்பை மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் ஒப்படைத்தார்கள். மிகவும் விரைவில் இருசாதனைகள் நிலைநாட்டப்பட்டன. ஒன்று நவீன சந்தை மற்றது நவீன பஸ் நிலையப் எந்தவகையிலும் நகர சபை ஆலோசனைகளில் முரண்பாடில்லாமல் நகர சபை உறுப்பினர்கள் முன்மாதிரியாக நடந்துவருவது பாராட்டப்படக்கூடிய விஷயம்'' என்ருர்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா பேசும்பொழுது. இன்னும் இரண்டு விஷயங்கள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்ருர் ஒன்று நவீன நகர மண்டபம், மற்றது ஒரு சிறந்த விளையாட்டு மைதானம் என்று அவர் கூறினர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன். அல்பிரட் பேசுகையில், சாவகச்சேரி நகரசபை உள்ளூராட்சி மன்றங்களில் முக்கிய இடத்தைவகிப்பதாகவும், மிகவும் கூடிய விரைவில் சாவகச்சேரி மாநகரசபை அந்தஸ்தை அடையும் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

திரு. ப. வே. இராசரத்தினம், திரு. சு. பாலசுப்பிரமணியம். நகராட்சிமன்றச் செயலாளர் திரு. த. நவரத்தினராசா உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

(அ)

# 'மேற்கத்தைய இலக்கிய உலகி நாவலின் எல்லைக்கோடுகள் அகலிக்கப்பட்டுவருகின்றன''

**— சி. வி. வேலுப்பிள்ளை**

(அட்டன்)

''மலையகத்தின் இலக்கிய வளர்ச்சியில் எனது பங்கு என்று எதையாவது சொல்வதாக இருந்தால் அது மகாவலி கங்கையில் மூன்று வாளி தண்ணீரை ஊற்றியது போன்றது தான்'' என்று அட்டன் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ''வீடற்றவன்'' நாவல் வெளியீட்டு விழாவில் உரையாற்றியபோது திரு. ஸி. வி. வேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

'எனது நாவல் நான் தோட்டத்து வாழ்க்கையில் கண்ட யதார்த்த நிலைமைகளை ஆதாரமாகக்கொண்டது. எனது நாவலில் கதை என்று குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகப் பெரியகதை காணப்படவில்லை என்று ஒரு குறிப்புக்கூறப்பட்டது. நாவலின் எல்லைக்கோடுகள் மேற்கத்தைய இலக்கிய உலகில் அகலிக்கப்பட்டுவருகின்றன. முரசாக்கியின் ஜப்பானிய நாவலான கெஞ்சி கதையிலிருந்து—டொன் கி ஹோர்த்தேயின் செர்வாண்டிஸ் என்ற நாவலிலிருந்து, ஜேம்ஸ் ஜொய்ஸின் நாவல்வரை நாவல்வடிவமானது பல வளர்ச்சி நிலையைச கடந்து வளர்ந்து வந்திருக்கிறது'' என்று அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ரா. மு. நாகலிங்கம் பேசுகையில், ''இலங்கையில் நூல் வெளியீட்டாளர்கள் எதிர்நோக்கும் நெருக்கமான பிரச்சினைகளின் மத்தியில் 'வைகறை' வெளியீட்டினர் மலையக ஆக்கங்களைத் தொகுத்து இதுவரை மூன்று நூல்களை வெளியிட்டிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும். இத்தகைய வெளியீட்டு முயற்சிகள் நிறைந்த பொருளாதாரக் கஷ்டங்களுக்கூடாகவே மேற்கொள்ளப்படமுடியும் என்பதை நான் அனுபவபூர்வமாக அறிவேன்'' என்று கூறினர்.

''சமுதாய மாற்றங்களுக்கேற்ப நாவல் வடிவமும் தனது உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பெரும் மாற்றங்களைக்கொண்டு காணப்படுகிறது. இன்றைய நாவல்களில் தொழிலாளர் வர்க்கத்தினர் வாழ்க்கையின் அடிமட்ட நிலையில் காணப்படுவோரின் துயரங்கள் ஆகியவையே முனைப்பாக எடுத்தாளப்படுகின்றன'' என்று பேராதனைப் பொருளியல்துறை விரிவுரையாளர் திரு எம். சின்னத்தம்பி 'வீடற்றவன்' நாவலை அறிமுகப்படுத்தி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வைகறை வெளியீட்டின் சார்பில் திரு. மு. நித்தியானந்தன் உரையாற்றுகையில், 'ஈழத்தின் நாவல் இலக்கிய வளர்ச்சியில் அவசியம் குறிப்பிடப்படவேண்டிய மலையகத்தின் மூத்ததலைமுறை எழுத்தாளரான திரு. சி. வி. வேலுப்பிள்ளையின் 'வீடற்றவன்' என்ற இந்த நாவல் நூல் வடிவம் பெருததால் இதுகால வரை அது உரிய மதிப்பீட்டினைப்பெறவில்லை. மலையகத்தில் இருந்து எழுதப்பட்டவை என்பதற்காக அல்ல, சாதனைரீதியில்குறிப்பிடத்தக்கவை என்ற நோக்கிலேயே இந்த வெளியீட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன, பழுத்த தொழிற்சங்கவாதியான சி. வி. தமது நேரடி அனுபவத்திலிருந்து இந்த நாவலை ஆசகியிருப்பது அதன் கலாபூர்வமான வெற்றிக்கு வழியமைத்திருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

இவ்வெளியீட்டு விழாவில் ஈழத்து நூல்கள் பற்றிய கண்காட்சியும் இடம்பெற்றது.

(அ)

# ''மது ஒழுக்கத்தைமட்டுமன்றி உடலையும் கெடுக்கிறது''

(புங்குடுதீவு)

''இன்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இளந்தமிழர் மன்றம் மது ஒழிப்பு தீண்டாமை ஒழிப்பு சமுதாயப் பணி ஆகிய மூன்று முக்கிய குறிக்கோள்களுக்காக அயராதுழைத்து வருகிறது. இந்தப்பணிகள் என்றென்றும் தொய்வின்றித்தொடர வழிவகுக்க தேண்டியது இளைஞர்களின் இன்றியமையாத கடமையாகும். மதுவானது ஒழுக்கத்தைக் கெடுத்து. சிந்தனைத்திறனையும் குடும்பத்தை மட்டும் சீரழிக்கவில்லை உடலையும் கெடுக்கிறது மழுங்கடிக்கச் செய்யும் மதுவை சட்டம் போட்டு மாத்திரம் தடுத்துவிடமுடியாது. சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமே மதுவையும் தீண்டாமையையும் முற்ருகப் போக்காட்டமுடியும். உள்ளத்துணர்வுகள் கிளர்ந்தெழுந்து செயற்பட்டால்தான் எதையும் சாதிக்கமுடியும். எனவே இளைஞர்களும் பெரியவர்களும் இணைந்து ஒற்றுமையாகச் செயற்பட்டு இலட்சியங்களை வென்றெடுக்க வேண்டும்''

புங்குடுதீவு இளந்தமிழர் மன்ற பதினைந்தாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்றத்தலைமைச் செயலகமான அறிவகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இடம்பெற்ற புதியநிர்வாகிகள் தெரிவின்போது தலைவராக திரு. எஸ். கே. மகேந்திரனும் செயலாளராக நா. பஞ்சலிங்கம் ஆசிரியரும், பொருளாளராக கு. சண்முகலிங்கம் ஆசிரியரும் பிரசாரச்செயலாளராக ந, இராசதுரை ஆசிரியரும் விளையாட்டுத் துறைச்செயலாளராக கா. கந்தசாமியும் கலைத்துறைச் செயலாளராக ந. தனபாலசிங்கமும் உபதலைவராக க. சிவதலைவரனும் மசயற்குழு உறுப்பினர்களாக செ. நித்தியானந்தன் சி. சசிகாந்தன ச. மோகனதாசன் செ. உதயகுமார் இ, கணேசமூர்த்தி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# தாம்போதி திருத்த வேலை துரிதம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு வேலணை அம்பலவாணர் தாம் போதி வீதியைத் திருத்தியமைக்கும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று கடலரிப்புக்குட் பட்டிருக்கும் கேரதீவு வீதியைச் செப்பனிடுவதோடு இறுபிட்டி ஊரை தீவு வீதியில் அறிவகத்துக்கு முன்பாக நீர்மேவிப்பாயும் பகுதியிலும் ஒருமதகு அமைப்பதில் நெடுஞ்சாலைத்திணைக்களம்அக்கறைகாட்டிச் செயற்பட வேண்டுமென்று இப்பகுதிமக்கள் ஆவல் தெரிவிக்கின்றனர்.

(அ)

# வேலைநிறுத்தம்செய்வோர்மீது கடுமையான நடவடிக்கை

புதுடில்லி, ஜன. 18

இந்தியாவில் நாளை (இன்று செவ்வாய்க்கிழமை) நடைபெறவிருக்கும் பொதுவேலை நிறுத்தத்தை முன்னிட்டு கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலங்களில் உத்தேச பொது வேலைநிறுத்தம் போதிய ஆதரவுபெறவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோர்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சில மாநிலங்கள் அறிவித்துள்ள அதே நேரத்தில், வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோர் தாங்களாகவே வேலையிலிருந்து விலகிக்கொண்டதாகக் கருதப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.




## பிரிட்டனில் அமெரிக்கத் தளங்கள் அதிகரிப்பு

லண்டன், ஜன. 18

'பிரிட்டனில் அமெரிக்க ராணுவம் அதிகரித்துவருவது குறித்து பிரிட்டிஷ் மக்கள் பெருங்கவலை கொண்டுள்ளனர். நாட்டிலுள்ள யுத்த எதிர்ப்பு இயக்கம் சமீப காலத்தில் இந்த ராணுவ அதிகரிப்புக் குறித்தும் மேலும் எதிர்ப்புத் தெரிவித்துவருகிறது' என்று பிரிட்டிஷ் பத்திரிகையாளரான 'நியூஸ்டேஸ்மன்' நிருபர் திரு. ரொபேர்ட் மக்கே எழுதுகின்றார்.

'பிரிட்டனில் 53 அமெரிக்கத் தளங்களே இருப்பதாக பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தது. ஆனால் நாட்டில் 100க்குமதிகமான அமெரிக்கத் தளங்கள் உள்ளன. பாதுகாப்பு அமைச்சு கூறிய கணக்கைக்காட்டிலும் அதிகமான இடங்கள் முட்கம்பிகளால் சூழப்பட்டு, காவற்கோபுரங்களுடன் இருப்பதைக் காணலாம். ராணுவத்தினரும் அவர்களது குடும்பத்தினருமாக 60,000 அமெரிக்கர்கள் பிரிட்டனில் உள்ளனர்' என்றும் திரு. ரொபேர்ட் மக்கே தனது விமர்சனத்தில் எழுதுகிறார்.

'பிரிட்டனில் 'எஃப்—111' ரகத்தைச் சேர்ந்த 156 குண்டு வீச்சு விமானங்கள் உள்ளன. பிரிட்டிஷ் தீவுகளில் நிலைகொண்டுள்ள அவை. தமது சொந்தப்பிரதேசத்தில் இருப்பதைப்போல் நடந்துகொள்கின்றன. அமெரிக்க விமான ஓட்டிகள், யுத்த விமானங்கள் இத்தனை உயரத்தில்தான் பறக்கவேண்டுமென்று கூறும் பிரிட்டிஷ் சட்டங்களையும் மீறி மிகத் தாழப் பறந்து தொல்லை கொடுக்கின்றன, பிரிட்டிஷ் மக்கள் இந்த விமானங்கள் பறக்கும்போது தமது வீடுகளில் கண்ணாடி யன்னல்கள் அதிர்வதை விரும்புவதில்லை' என்றும் இந்த பிரிட்டிஷ் பத்திரிகையாளர் எழுதுகிறார்.

'பிரிட்டனில் அமெரிக்க அணுவாயுதங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ள இடங்களில் ஏற்படுகின்ற நச்சு ரசாயன கசிவுகள் குறித்தும் பிரிட்டிஷ் மக்கள் எச்சரிக்கையடைந்துள்ளனர். 1981 நவம்பரில் ஸ்கொத்லாந்தில் உள்ள அமெரிக்க நீர்மூழ்கிகளுக்கான அணுவாயுதங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள விபத்து குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் பொறுப்பற்ற வெளிவிவகாரக் கொள்கை குறித்து பிரிட்டிஷ் மக்கள் அனைவருமே அதிருப்தி தெரிவிக்கிறார்கள். எல்லைக்குட்பட்ட யுத்தம் குறித்து அமெரிக்கா பேசும்போது அது எங்களையே எல்லைக்குட்படுத்துகிறது என்று தொழிற் கட்சிப்பிரமுகரான கிட்சன் கூறுகிறார், அமெரிக்க ராணுவ பிரசன்னம் பிரிட்டனைப் பாதுகாக்க என்பது அபத்தமான கருத்து. எந்தவொரு தளமும் பிரிட்டனை பாதுகாக்கமாட்டாது. ஆனால் அணுவாயுதத் தாக்குதலுக்கு எம்மை இலக்காக்கவே இந்த அமெரிக்க ராணுவத்தளங்கள் உதவும்' என்று திரு. மக்கே குறிப்பிட்டுள்ளார்.

## பாகிஸ்தானுக்கு சீன-அமெரிக்க ஆயுதம்

மாஸ்கோ, ஜன. 18

அமெரிக்காவும் சீனவும் பாகிஸ்தானுக்கு தங்கள் ஆயுத விநயோகத்தை அதிகரிப்பதன் மூலம் ராணுவத் துறையில் தங்கள் தொடர்புகளைத் தீவிரமாக வலுப்படுத்தி வருகின்றன என்று 'பிராவ்தா' பத்திரிகை எழுதியுள்ளது.

'பாகிஸ்தானில் ஆயுதங்களைக்கொண்டுவந்து குவிக்க வாஷிங்டனும், பீகிங்கும் விரும்புவதற்குக் காரணம். தெற்கு ஆசியாவில் அவற்றின் ராணுவ நலன்களே. இது தவிர, பாரசீகக் குடாவைப் பாதுகாப்பதற்கான அமெரிக்க ராணுவ தந்திரத்தில், பாகிஸ்தானை மத்திய இணைப்பாகப் பயன்படுத்த அமெரிக்க நிர்வாகம் விரும்புகிறது என்பதை அது மறக்க விரும்பவில்லை' என்றும் அப்பத்திரிகை எழுதியுள்ளது.

## விபத்து மரணம்

(மாவிட்டபுரம்)

70 வயது மூதாட்டி ஒருவருக்கு குப்பி விளக்கு யமனாக மாறியது.

பஸ்தியாம்பிள்ளை றெசினா அம்மா என்னும் மூதாட்டியே இவ்வாறு மரணமானவராவார்.

இவர் இரவு படுக்கைக்கு சென்றபோது குப்பிவிளக்கை அருகில் வைத்திருந்ததாகவும், அது தவறுதலாகச் சரிந்து தீப்பற்றிக் கொண்டதாகவும் விசாரணையில் தெரியவந்தது. திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. நா; தம்பிராசா விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கினார்.

## ஜே. ஜனநாயக குடியரசை நாமும்பின்பற்ற வேண்டும்

### நட்புறவுச்சங்கக்கூட்டத்தில் வட்டு எம் பி.

(யாழ்ப்பாணம்)

''எமது நாடும் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசும் சுதந்திர நாடுகளாக ஒரே காலத்தில் உருவாகின, ஆனால் எமது நாடு அபிவிருத்தி அடைந்த நாடாகிவிட்டதாக கூறிவிட முடியாது. இதற்கு மாறாக ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு அபிவிருத்தியடைந்த நாடாக மாத்திரமல்ல உலகத்திலேயே தொழில்-வளர்ச்சியில் மிக முக்கிய நாடாக திகழ்கிறது''.

இலங்கை — ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவு சங்க யாழ்ப்பாண கிளை வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் வட்டுக்கோட்டை எம், பி. திரு, த. திருநாவுக்கரசு இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர்தொடர்ந்து கூறியதாவது: ''ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு திட்டமிட்ட பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்நாட்டு மக்கள் கடின உழைப்பு தியாக சிந்தனை தேசப்பற்றுடையவர்கள். அதனால்தான் அந்நாடுதிட்டமிட்டபடி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

''முதலாவது உலகமகாயுத்தமும் இரண்டாவது உலக யுத்தமும் ஜேர்மன் மண்ணிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது, அதனால் அந்நாட்டு மக்கள் சொல்லொணுத் துயரங்களுக்குள்ளானார்கள், அந்த அனுபவத்தைக் கொண்டுதான் உலக சமாதானத்தைப் பேணிப்பாதுகாக்க அரும்பாடுபடுகின்றனர்.

''அந்நாட்டில் தவறுகள் ஏற்பட்டால் அதனை ஏற்று திருந்தி நடப்பது மாத்திரமல்ல அப்படியான தவறுகளை எதிர்காலத்தில் ஏற்படாமல் பார்த்துக் கொள்கின்றனர். அந்நாட்டு கலை, கலாச்சாரம், பொருளாதார முன்னேற்றம், கடின உழைப்பு தேச பக்தி போன்றவை எமது நாட்டு மக்கள் பின்பற்ற வேண்டிய உதாரணங்களாகும். நட்புறவுச் சங்கங்களை அமைத்து பரஸ்பரம் நாங்கள்செயல்படவேண்டும்'' என்றார்.

பலரும்உரையாற்றினர்கள்.

புது வருட நிர்வாகிகள் புதிய உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

தலைவர் திரு தா. திருநாவுக்கரசு எம், பி., உபதலைவர்கள்: திருவாளர்கள் எஸ். தியாகராசா, கே. அருணசலம், இ. பாலசுப்பிரமணியம், எம். எம். மன்சூர். செயலாளர்: திரு வி கே. ஈசுரபாதம். பொருளாளர்: திரு ஐ. சாந்தன்.

## தலைமன்( ... துரித ...

(கொழும்பு)

தலைமன்னருக்கும் தூத்துக்குடிக்குமிடையே துரிதபடகுச் சேவையை நடத்த உள்நாட்டுப் படகுச் சேவை வட்டாரங்கள் ஆலோசித்து வருகின்றன.

இத்துரிதப் படகுச் சேவை பாக்குநீரிணையில் மேற்படி இரு இடங்களுக்குமிடையே நடைபெறும் பட்சத்தில் ஒரே நாளில் மூன்று நான்கு தடவைகள் போக்குவரத்துச் சேவையை நடத்த முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தலைமன்னருக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையே நடைபெறும் படகுச் சேவை மூன்று மணித்தியாலங்களுக்குமேல் செல்வதா...

...வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துரிதப் படகுச் சேவைபற்றி விளக்கிய உள்நாட்டு கப்பல் நிறுவன இயக்குனர் ஒருவர் ... காலதாமதம், பண விரயம் என்பவற்றைக் குறைக்கமுடியுமென்றும் அறிவித்துள்ளார். (ஜ)

## பொலிஸ் நிலையத்தின் அருகில் புதைகுழி கண்டுபிடிப்பு

### அதற்குள் மனித எலும்புக் கூடுகள்

(வத்தேகம)

1971ம் ஆண்டு பயங்கரவாத நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட இளைஞர்களைப் புதைத்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படும் பெரும்புதைகுழியொன்று பெருமளவு எலும்புக்கூடுகளுடன் வத்தேகமப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வத்தேகமப் பொலிஸ் நிலையத்திற்கு பின்புறத்தில் நீர்த் தாங்கியொன்றைக் கட்டுவதற்காக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதே மேற்படி புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெருமளவு மனித எலும்புக் கூடுகளுடன் காணப்படும் இக்குழியில் 71ம் ஆண்டு சேகுவேரா பயங்கரவாதத்தின் போது கொல்லப்பட்ட இளைஞர்களைப் புதைத்திருக்கலாமெனப் பொலிஸார் கருதுகின்றனர். (ஜ)

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

# பயிற்சிக் காலத்தில் ஆசிரிய மாணவர் கலாசாலையில்தான் தங்கவேண்டும்

(கரவெட்டி)

இவ்வருடம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இம்மாதம் 25ம் திகதிக்கு முன்னர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் சமூகமளித்திருத்தல் வேண்டும் என்று ஆசிரியர் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். எச். டி. சுமணசேகர அறிவித்துள்ளார்.

இவ்வருடம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஆசிரிய மாணவர்களுக்கு அனுப்பிவைத்திருக்கும் அறிவித்தலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''தோட்டப்பாடசாலைகளில் சேவை செய்த ஆசிரியர்கள் அரச சேவையில் அமர்த்தப்படமுன்னர் பாடசாலையில் நியமனம் பெற்ற திகதி பிரதேசக் கல்விப்பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் அத்துடன் கலாசாலையில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற பிரதேச கல்விப்பணிப்பாளரது கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும் கல்விப்பணிப்பாளர் விடுவிக்காதவிடத்து கலாசாலையில் அனுமதி வழங்கப்படமாட்டாது.

'பிணைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் சர்வகலாசாலைக்கோ அல்லது வேறு கல்வி நிலையங்களுக்கோ பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. பயிற்சியை முடித்த பின்னர் ஐந்து வருடத்திற்கு அரசாங்க அல்லதுஉதவி நன்கொடைபெறும் பாடசாலை ஒன்றில் கடமையாற்ற வேண்டும்.

''பயிற்சிபெறும் காலத்தில் பயிற்சியை இடைநிறுத்தினுல் பயிற்சியை ஆரம்பித்த காலம் முதல் இடைநிறுத்தம் செய்த காலம்வரை சம்பளமாகப் பெற்றுக்கொண்ட தொகையையும் அத்துடன் பயிற்சியின் பொருட்டு ஏற்பட்ட செலவையும் அரசாங்கத்திற்குச்செலுத்தல்வேண்டும்.

''பயிற்சிக் காலத்தில் சகல ஆசிரிய மாணவர்களும் கலாசாலையிலேயே தங்கி இருத்தல் வேண்டும் கலாசாலை அதிபர் கருதினுல் தற்காலிகமாக கலாசாலைக்கு வெளியே வசிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

''பயிற்சிக் காலம் 3 வருடகாலமாகும். இதில் இருவருடகாலம் பயிற்சிக் கலாசாலையிலும் ஒருவருடம் பாடசாலை ஒன்றிலும் நடைபெறும். 'பயிற்சிக் காலத்தில் கலாசாலை அதிபர் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் பயிற்சி இருத்தல்வேண்டும். அப்படி இல்லாவிடின் பயிற்சியை இடைநிறுத்தம்செய்ய நட்வடிக்கை மேற்கொள்ளப்படும்''

## அ. இ. இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்க யாழ். கிளை

(யாழ்ப்பாணம்)

அ. இ. இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் யாழ். மாவட்டக்கிளை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: யாழ்.மாநகரசபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஜனுப் ற. மு. இமாம், செயலாளர்: வடபிராந்திய கல்வி அதிகாரி ஜனுப் எம், ஏ. சி. ஏ. ஸலாம், பொருளாளர்: பிரபல வர்த்தகர் ஜனுப் எம். வை. எம். தாஹா. மற்றும் யாழ். மாநகரசபை உறுப்பினர்களும், இப்பகுதி சட்டத்தரணிகளும், பாடசாலைகளதிபர்களும், சமூகசேவையாளர்களும் கொண்ட 9 பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இயக்கத்தின் தேசியத்தலைவராகிய அல்ஹாஜ் எம்,ஐ.எம் நளீம் தமது அமைப்புக்குழுவுடன் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் நோக்கமாக யாழ்ப்பாணத்துக்கு வரவிருப்பதாக இயக்கத்தின் யாழ்.மாவட்டக்கிளைச் செயலாளர் தெரிவித்தார். (மா-அ)

போயா தினத்தில்

## இறைச்சி விற்பனை ஒருவருக்கு றிமாண்ட்

(புலோலி)

போயாதினத்தில் மாட்டிறைச்சி விற்பனை செய்த விற்பனையாளரொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

போயா தினத்தில் இது தடை செய்யப்பட்டுள்ள போதும் பருத்தித்துறை மீன் சந்தையில் மாட்டிறைச்சிக் கடையில் கடந்த போயா தினத்தில் இறைச்சி விற்பனை செய்து கொண்டிருந்த அபான் பாருக் என்பவர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ், திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியால் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட இச் சந்தேக நபர் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# யாழ். நகரில் ஜேப்படி சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

## பொலிஸார் எச்சரிக்கை

(சுண்டிக்குளி)

யாழ். நகரில் பாதசாரிகள், வாகனநெருக்கடிகளைப் பயன்படுத்திப் பலஜேப்படித்திருடர்களும் சைக்கிள் திருடர்களும் நடமாடுவதாக யாழ். பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களில்மட்டும் சுமார் 25 சைக்கிள்கள் யாழ். நகரில் களவாடப்பட்டுள்ளன. பஸ் வண்டிகளில் தமது பொருட்களையும் மணிபர்ஸ்களையும் ஜேப்படித் திருடர்களிடம் பறிகொடுத்தபலர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனராம்,

யாழ். பஸ் நிலையத்தைச் சார்ந்த இடங்களிலும் பெரியாஸ்பத்திரியிலும், பண்ணை சின்னக்கடை மீன் மார்க்கட்டுகளிலும் அதிகமான சைக்கிள்கள்களவாடப்பட்டுள்ளதாகப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# 'தமிழர் கலாச்சாரம் பேணப்பட வேண்டும்'

(புங்குடுதீவு)

''தமிழர்கள் தமது கலாசாரத்தின் தொன்மையைப்பறைசாற்றவும் பொருளாதார நிறைவின் மகிழ்வைப் பிரதிபலிக்கவும் பன்னெடுங் காலமாக பொங்கல் விழாவைக் கொண்டாடி வருகின்றனர். ஆனுல் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் தமது கலாசாரத்தையும் பொருளாதாரத்தையும் காப்பாற்ற வேண்டியவர்களாகவுள்ளனர். எமது கலாசார விழாக்களை நடத்துவதிலே கூட நாம் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியிருக்கிறது, சமயமென்ருலென்ன கலாசாரமென்ருலென்ன அரசியல் கண்ணுேட்டத்துடனேயே நம்மை அரசு நோக்குகின்றது. இந்த நிலை நீடித்தால் எமது கலாசார சின்னங்களை தொல்பொருட் காட்சிச்சாலையிலேதான் வருங் காலத்தில் பார்க்க வேண்டி வரும்''

புங்குடுதீவு இருபிட்டி சன சமூக நிலையப் பொங்கல் விழசவில் கலந்து கொண்டு பேசுகையில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. சு. பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் போது இடம்பெற்ற விளையாட்டுப்போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு தீவுப்பகுதி எம். பி. திரு கா. பொ.இரத்தினம் பரிசில்களை வழங்கினுர். மற்றும் பலரும் பேசினர், ஆசிரியர் திரு த. தவராசா நன்றி தெரிவித்துப் பேசினுர். (அ)

## எதிரிக்குப்பிணை

(புங்குடுதீவு)

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த அந்தோனி கோபால் என்பவரைக்கல்லால் அடித்து காயப்படுத்தியதாக அதேயிடத்தைச் சேர்ந்த இராமநாதர் சுப்பிரமணியம் என்பவருக்கெதிராக பொலிசாரால் தொடரப்பட்ட வழ்க்கு புங்குடுதீவு ஆரம்பநீதிமன்ற நீதிபதி திரு ஜெ. விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்காக வந்தபோது எதிரியை நீதிபதி பிணையில் செல்ல அனுமதித்தார்.

இவ்வழக்கில் எதிரிக்காக சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரனும் வழக்காளி தரப்பில் நெடுந்தீவு பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. நவரத்தினமும் ஆஜராகினர்.

மேல்விசாரணை அடுத்த மாதம் 12 ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (அ)

## சிறப்பாக நடைபெற்றது

(மன்ஞர்)

ஈழத்து சிவனடியார் திருக்கூட்டத்திஞல் நடத்தப்பட்ட சாதனை சிவபூசை மகாநாடும் திருவாசக விழாவும் திருக்கேதீஸ்வர திருவாசக மடத்தில் நடைபெற்றது.

விழாக்காலத்தில் புராணப் படலம், திருவாசகபாராயணம் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், திருவாசக இசை, விரிவுரைகள் பட்டிமன்றம் ஆகிய அம்சங்கள் இடம் பெற்றன,

மன்ஞர் மேலதிக அதிபர் திரு, ஏ, ஜே. செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. நாகசண்முகநாதன் திரு. மு. தியாகராஜன் செல்வி விசாலாட்சி ஆகியோரின் உரைகள் இடம் பெற்றன. இறுதி நாள் விழாவில் ஆருத்திரா தரிசனத்துடன் காலை 8 மணியளவில் புராணப்படலமும் மாகேசுர பூசையும் இடம் பெற்றது.

## சமூகநலத்திட்டம் அங்குரார்ப்பணம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் அரியாலை மேற்கு சமூக சேம நலத்திட்டத்தின் ஆதரவில் தையல் பயிற்சி வகுப்பும், சிறுவர் பாடசாலையும் பரதநாட்டிய பயிற்சி வகுப்பும் அரியாலை மேற்கில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சமூக சேமநலத்திட்டத் தலைவரும் இளைப்பாறிய அதிபருமான திரு. சி. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் நல்லூர் பரி.யாக்கோபு ஆலய சேகரப்பிரதம குருவும் யாழ்ப்பாண அர்ச்சீக்கனுமான அருட்திரு சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் தையல் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்து ஆசிஉரை வழங்கிஞர் சமூக சேமநலத்திட்டச் செயலாளர் திரு. எஸ். துரைசிங்கம் வரவேற்புரை நிகழ்த்திஞர். பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. அலெக்சாந்தர் உட்பட்ட பலர் இவ்வைபவத்தில் கருத்துரை வழங்கினர்.

## இன்று குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் குருபூசை, திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 00 மணிக்கு ஆரம்பமாகும். மாலை 5 00 மணிக்கு திவ்யஜீவனசங்க மண்டபத்தில் அமெரிக்காவிலிருந்து வருகை தந்துள்ள ஸ்ரீசுப்ரமுனிய சுவாமிகளுக்கும் பக்தர்களுக்கும்வரவேற்பு அளிக்கப்படும்.

## நோயாளர் புகார்

(மண்டைதீவு)

மண்டைதீவு அரசினர்வைத்தியசாலையில் இரவுநேரங்களில் வைத்திய அதிகாரிகள் கடமையாற்றுவதில்லையாம்! குறிப்பாக பிரசவத்துக்காக இரவு நேரங்களில் வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் மிகவும்பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

# பொலிஸ் விசாரணையிலும் விபரம் வெளியிடாதபலே ஆசாமிகள்!

(மாவிட்டபுரம்)

பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களாக இருக்கலாமென்று சந்தேகிக்கப்படும் இரு நபர்கள், பொது மக்களால் பிடிக்கப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குரும்பசிட்டிப் பகுதியில் கடந்த ஒரு மாதகாலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வந்துள்ளன. மூன்று திருட்டுச்சம்பவங்களும், இரு திருட்டு முயற்சிசம்பவங்களும் அடுத்தடுத்து நடைபெற்றன. இதனையடுத்து இரவு நேரத் தொண்டர்கள் அங்கு இயங்கி வருகிருர்கள்! இரவு நேரம் குரும்பசிட்டிப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய நால்வரை இவர்கள் விசாரிக்கவே இருவர் ஓடித் தப்பி விட்டனர். இருவர் மட்டும் அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்கள் பிடிக்கப்பட்ட இடத்திற்கருகில் வாள் ஒன்றும் கிடக்கக் காணப்படவே அதனையும் கைப்பற்றிய தொண்டர்கள் இந்தஇருவரையும், வாளையும் காங்கேசன் துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களை பொலிசார் தீவிர விசாரணைக்குட்படுத்திய போதும் இவர்கள் தமது பெயர், ஊர் போன்ற விபரங்களை தெரிவிக்கமறுத்துள்ளதாகவும், அச்சுவேலியைச் சேர்ந்ததாக சில சமயங்களில் அவர்கள் கூறுகின்றபோதும் அது சரியா என்பது ஊர்ஜிதப்படுத்தப்படவில்லையெனவும் பொலிசார் கூறுகின்றனர். இவர்கள் போத்தல், பித்தளை, பழைய சாமான்கள்சேகரிப்பவர்களாக இருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

இப்பகுதியில் நடந்த பல திருட்டுக்களுக்கு இவர்கள் காரணகர்த்தாக்களாக இருந்தார்களா என்பது குறித்து பொலிசார் விசாரணை செய்து வருவதுடன் இவர்களுடன் வந்து தப்பியோடிய மற்றைய இருவரையும் தேடி வலைவிரித்துள்ளனர். பொலிஸ் காவலில் உள்ள இருவரில் ஒருவர் 14வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரதேசஅபிவிருத்தி, இந்துகலாசாரம்: இதுவரை அமைச்சின் சாதனைகள்

## அமைச்சர் 'இராசு' பெருமிதத்துடன் விளக்குகிறார்

(மட்டக்களப்பு)

''யாழ்ப்பாணம் பிரதான வைத்தியசாலைக்குத் தேவையான முக்கிய கருவிகள் கொள்வனவு செய்வதற்காகப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் 13 லட்சம் ரூபாவும் பருத்தித்துறைத் தொகுதி திக்கம் கிராமத்தின் மின்சாரம் விஸ்தரிப்பிற்காக 4 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய அமைச்சான எனது அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யும் குறைந்த நிதியைக் கொண்டு திட்டமிட்டு செயல்படுகிறேன். எனது அமைச்சின் பணியை அரசியலுக்கு அப்பாற்பட்டு நின்று பார்த்தால் உண்மை புரியும்.''

இவ்வாறு கல்லடி முகத்துவாரம் கிராமத்தில் கிராம அபிவிருத்தி நிலையமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய பிராந்திய அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல், இந்துக் கலாச்சார அமைச்சர் திரு. இராசதுரை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''எனது அமைச்சர் பதவிக்குரிய பணிகளை நான் தெய்வத்துக்குரிய பணியாகவே செய்து வருகின்றேன். இந்து சமயத்தவர் குறைந்து வாழ்கின்றபகுதிகளில் அவர்கள் அனுபவித்த பிரச்னைகளை இன்று நான் எனது அமைச்சுமூலம் தீர்த்து வருகின்றேன்.

''நுவரெலியா, மாவட்டத்தில் கந்தப்பளை என்னும் இடத்தில் கோவில் கட்ட ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபா இந்துக்களால் நிதி திரட்டப்பட்டது. ஆனால் காணி இல்லை. அதேபோல் வத்துகமம் என்னுமிடத்தில் 78 ஆயிரம் ரூபா பணம் இருந்தது; காணியில்லை. இந்நிலையில் காணிகள் பெற்றுக் கொடுத்துள்ளேன். மாளிகாவத்தையில் இந்து ஆலயம் அமைக்கக் காணியும் நிதி உதவியும் வழங்கினேம். புத்தளம் கற்பிட்டியில் 33 இந்துக் குடும்பங்களுக்கெனக் கோவில் கட்ட நிதி, ஆனைமடுவ முந்தல் திரௌபதி அம்மன் கோவில் புனரமைக்க நிதி, மற்றும் பதுளை காளியம்மன் ஆலயம் விஸ்தரிக்க காணியும், மின்சார வசதிக்கு நிதியும் வழங்கப்பட்டது. இவைகள் என் அமைச்சு ஆரம்பித்ததையடுத்துக் கிடைத்தவை.

### அறக் கட்டளை

''கடந்தகால வரலாற்றில் இந்து சமயத்திற்கென உருவாக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்கு அறக் கட்டளை நிதியம் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் எனது அமைச்சு மட்டக்களப்பில் இராமகிருஷ்ண மிஷன், யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனம், நுவரெலியாவில் லிங்கேஸ்வரர், திருகோணமலையில் சிவயோகசமாஜம், நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி நிலையம் ஆகியவற்றுக்கு நிதியம் ஆரம்பித்து காசோலையையும் வழங்கியுள்ளது.

### முல்லைத்தீவுக்கு 18 லட்சம ரூபா

''அபிவிருத்தித்துறையைப் பொறுத்தவரை முல்லைத்தீவு மாவட்டத்தின் எதிர்காலம் மின்சாரத்தில்தான் தங்கியுள்ளது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நிரந்தர மின்சாரம் கிடைக்க சுமார் 18 லட்சம் ரூபாய்ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன.

''யாழ்ப்பாணத்தில் 15லட்சம் ரூபாய் செலவில் நாவலர் மணிமண்டபம், மட்டக்களப்பில் விபுலானந்தர் மணிமண்டபம், கரடியனாறு கருங்கல் உடைக்கும்ஆலை, வேப்பவெட்டுவான் ஓட்டுத்தொழிற்சாலை, சத்துருகொண்டான் கோழிப் பண்ணை, படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், கைத்தொழில் பேட்டை வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. இவைகள் என் அமைச்சின் சேவைகள் என்பதை மனச்சாட்சி உள்ளவர்கள் உணர்ந்து கொள்வார்கள்

### தேர்தலைப்பற்றிச் சிந்திக்கவில்லை

தேர்தலைப்பற்றி நான் சிந்திக்கவில்லை. தேர்தலில்மக்கள் ஜனநாயக முறைப்படி தங்கள் எண்ணத்திற்கமையவாக்களிக்கட்டும். அது மக்கள் உரிமை''

மற்றும் இவ்வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்) திரு. அ. அந்தோனிமுத்து, கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. எஸ். சித்திரவேலு, மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சாம்பசிவஐயர் உட்படப் பலர் உரையாற்றினர்.

---

## 'பிள்ளைகளின் மனேவளர்ச்சிக்கு பெற்றோர் உதவவேண்டும்''

**— ரி.யோவான் அதிபர்**

(அரியாலை)

'பிள்ளைகள் சமூகத்திலும் நாட்டிலும் சிறந்த பிரஜைகளாக விளங்க வேண்டுவானுல் பெற்றோர் நல்லவர்களாக வாழ வேண்டும். பெற்றோர் தம்முள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதுடன் பிள்ளைகள்மீதும் போதிய அன்பு செலுத்த வேண்டும். பிள்ளைகள் தம் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவேண்டுமானுல் அவர்களிடம் கீழ்ப்படிவும் ஒழுக்கமும் பேணப்பட வேண்டும்,'

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரி அதிபர் திரு. ஸி. ஆனந்தராஜன் கல்லூரியில் புதிய வருடத்தில் அனுமதிக்கப்படும் பிள்ளைகளுக்கும் அவர்களது பெற்றோருக்கும் அளிக்கப்பட்ட அறிமுக வரவேற்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 'பெரிய கல்லூரிகளில் பிள்ளைகளுக்கு அனுமதி கிடைத்துவிட்டால் போதும் என்ற மன நிறைவுடன் வாழுகின்ற பெற்றோர் பலரை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. பிள்ளைகளின் மனேவளர்ச்சிக்கு உதவுகின்ற பெற்றோரே கல்வியில் அக்கறை கொண்டவர்கள் ஆவர். பிள்ளைகள் கல்வியில் கவனஞ் செலுத்த அவர்களைப் பெற்றோர் வழிநடத்த வேண்டும். மாணவர்கள் கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுகளிலும் ஏனைய கல்விக்கான துறைகளிலும் கவனஞ் செலுத்த பெற்றோர் அவர்களை வழிநடத்த வேண்டும். அளவுக்கதிகமான பணத்தை பெற்றோர் பிள்ளைகளுக்கு வழங்குவதால் பிள்ளைகள் சிறுவயதிலிருந்தே பணத்தை அனுவசியமான வழிகளில் செலவிடப் பழகிக்கொள்வர்' பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோர் தம்பங்களிப்பைச் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும் என்றூர்.

---

## 'பெற்றோருக்கு பிள்ளைகள் கீழ்ப்படியாமை பெருஞ் சாபக்கேடு'

(அரியாலை)

'பிள்ளைகள் தம் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வழக்கம் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. இது பெருஞ் சாபக்கேடாக அமைகிறது. பிள்ளைகளை விசுவாசத்தில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டியது பெற்றோரின் பாரிய கடமையாகும்.

இவ்வாறு யாழ்ப்பாண ஆர்ச்டீக்சன் அருட்திரு சாம் டி. ஹோர்சிங்டன் அடிகளார் நல்லூர் பரி. யாக்கோபு பேராலயத்தில் நடைபெற்ற திருவிருந்து ஒப்புக் கொடுக்கும் ஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

பெற்றோருக்குக் கீழ்ப்படிதலும் அவர்கள் சொற்கேட்டு நடத்தலும் பிள்ளைகளின பாரிய கடமைகளாகும். அதைப்போல பிள்ளைகளை நன்கு நேசிக்கப் பேணிக்காத்தலும் அவர்கள் இறை விசுவாசத்தில் நிலைத்து நிற்கவும் தீமையான வழிகளினின்று விலகி நடக்கவும் வழிகாட்ட வேண்டியதும் பெற்றோரின் கடமையாகும் என்றும் அவர் கூறினர். (அ)

---

## ஊமைபோல் நடித்த பலே சிறுவர்கள்

(மன்னூர்)

நாம் பிறவி ஊமைகள் உதவி செய்யுங்கள் என்ற அட்டையைக் காட்டி கிராமப்புறங்களில் பணம் சேகரித்து வந்த வாய் பேசக்கூடிய இரு சிறுவர்களை மறு விசாரணை வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னூர் நீதவான் உத்தரவிட்டார்.

இவ்விரு சிறுவர்களும் எருக்கலம் பிட்டிப் பகுதியில் ஊமை போல் நடித்து பணம் சேகரிக்கும் போது உண்மை கண்டு பிடிக்கப்பட்டனர்.

இரண்டு சிறுவர்களையும் மன்னூர் பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜார் செய்தபோது இவ்விரு சிறுவர்களையும் மறு விசாரணைவரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னூர் நீதவான் உத்தரவிட்டார்.

---

## பஸ்விபத்தில் பலியானர்

(மட்டக்களப்பு)

திருத்திய மோட்டார் சைக்கிளை செலுத்திப் பார்த்த பத்தொன்பது வயது தொழிலாளி பஸ் ஒன்றினுல் மோதப்பட்டு மரணமானுர்.

இச்சம்பவம் மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போ முன்பாக நடைபெற்றது. எல்லை வீதி வாசியான லயனல் ஜெயசூரியர் (19 வயது) என்னும் நபர்தான் பஸ்ஸினுல் மோதப்பட்டு மரணம் அடைந்தவராவர் மரணவிசாரணை நடத்திய மாவட்ட நீதிபதி தி.ருரி.சுந்தரலிங்கம் விபத்துமரணம் என்று தீர்ப்பளித்தார். (க)

---

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் சமூக சேவை இயக்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஆர். ஏ. யேசுநேசன் துணைத்தலைவர் வே. கணேசன் செயலாளர் ஏ. சி. ஏணெஸ்ந் துணைச்செயலாளர் சி. மகாலிங்கம் பொருளாளர் மீ. றசீஸ் பத்திரிகாசிரியர் அனலெசெழியன் 9 பேர் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டது. (மா அ)

---

## வைக்கிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கினுல் நடாத்தப்பட்டுவரும் 'பி' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் வைக்கிங்ஸ் விளையாட்டுக்கழகம் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை 2:1 கோல்களால் வெற்றியீட்டியது.

---

## இன்றைய உற்சவம்

(அரியாலை)

பலாலி புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த நோவினை இன்று செவ்வாய்க்கிழமையுடன் நிறைவு பெறுகிறது. இன்றிரவு சற்பிரசாத ஊர்வலமும், 20ந் திகதி காலை பாடற் பூசையுடன் திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்.

---

## வெளிச்சவீடு பழுது: கப்பல் வருவதில்தாமதம்!

(மன்னூர்)

தலைமன்னூர் துறைமுகத்திலுள்ள வெளிச்சவீடு தற்போது பழுதடைந்திருப்பதால் ராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னூர் நோக்கி வரும் கப்பல் நேரம் தாழ்த்தி வருவதுடன், கப்பலை சரியான இடத்தில் நிறுத்துவதிலும் பெரும் சிரமம் ஏற்பட்டு வருகிறது.

அத்துடன் இரவில் ஆழ்கடலுக்குச் சென்று வரும் மீனவர்களும் திசை தெரியாது தடுமாற்றத்துக்குள்ளாகி வருகின்றனர்.

### கோஷ்டிமோதல்

(மன்னூர்)

மன்னூர் பட்டினத்திலுள்ள படமாளிகை யொன்றில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற கோஷ்டி மோதல் மன்னூர் பொலிசாரின் தலையீட்டினுல் தடுக்கப்பட்டது

இக் கோஷ்டி மோதல் மன்னூர் பட்டினத்தைச் சேர்ந்த இரு பகுதியினருக்கிடையில் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

### சுங்க அதிகாரி வீட்டில் திருட்டு

(மன்னூர்)

தலைமன்னூர் சுங்க இலாக உயர் அதிகாரி தங்கியுள்ள விடுதியின் பின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் 3 ஆயிரம் ரூபாவை திருடிச் சென்றுள்ளதாக தலைமன்னூர் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக தலைமன்னூர் பொலிஸ் சார்ஜண்ட் நடராசலிங்கம், சிவராசா ஆகியோர் புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## பாடசாலைகளில் திடீர்ச் சோதனைகள்!

(கரவெட்டி)

வடமாநிலக் கல்வி அதிபதி திரு. க. சிவநாதன் தலைமையிலான கல்வி அதிகாரிகளைக் கொண்ட பரிசோதனைக் குழு பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் இருந்து யாழ். மாவட்டப் பாடசாலைகளில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

வாரந்தோறும் நடாத்தப்படும் இத் திடீர் பரிசோதனைகளின் போது பாடத்திட்டக் குறிப்புகள், மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகள், பாடசாலை நிர்வாக ஒழுங்குகள் என்பன பற்றிக் குறிப்பாக அவதானிக்கப்படும்.

(7 ம் பக்கம் பார்க்க)

---

## காரை மறுமலர்ச்சி மன்றம்

(யாழ்ப்பாணம்)

காரை மறுமலர்ச்சி மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மன்ற மூன்றலில் திரு ஐ. தேவகிருபாகரன் தலைமையில் நடந்தபோதுபின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: யோ. ஜெயரத்தினம், தலைவர்: ந. விக்ரர் ஜெயக்குமார். பொதுச் செயவாளர்: மா. தவராசா. நிர்வாகச் செயலாளர்: ந. ஞானதத்தன். பொருளாளர்: நா. குகநேசன் உபதலைவர்: சி. குமாரவேலு. கணக்குப்பரிசோதகர்: ஐ. சற்குணராசா, விளையாட்டுத் தலைவர்: இ. அருள்நேசன். பத்திராதிபர்: ப. தேவமித்திரன். விசேட நிருபர்: ஐ. தேவகிருபாகரன். விசேட குழு உறுப்பினர்கள்: ஏ. அருள்தாசன், செ. ஆனந்தராசா, சி. குமாரவேலு. (இ)

---

## உதவியை நல்வழியில் பயன்படுத்துக

(அரியாலை)

''யாழ்ப்பாணத்திலுள்ள வறிய குடும்பத்தவர்களுக்கு நோடிக் ஸ்தாபனம் யாழ். வை. எம். ஸி. ஏ. ஸ்தாபனம் மூலம் வழங்கிவரும் உதவியை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். இவ் உதவியைப் பெறும் மாணவ, மணவிகள் கல்வியில் போதிய திறமை காட்ட வேண்டும். இந்த உதவிமூலம் தமது வாழ்க்கையைச் சீர் செய்ய வேண்டும்''

இவ்வாறு யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. மண்டபத்தில் நோடிக் ஸ்தாபனத்தால் உதவி பெறும் மாணவ மாணவிகளுக்கு யாழ். வை. எம். ஸி. ஏ. நடாத்திய நத்தார்— புதுவருட தேநீர் விருந்துபசரணையின் போது அதன் தலைவரும் இளைப்பாறிய நல்லூர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபருமான திரு. ஜே. ஜீ. அரசரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாணவ — மாணவிகளுக்கு வை. எம். சீ. ஏ. ஸ்தாபனத்தால் அன்பளிக்கப்பட்ட பரிசில்களை ஸ்தாபனச் செயலாளர் திரு. பிளஞ்சாட் வழங்கினர்.

# இவர்கள் மீது நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

தொல்புரம் கமநலச் சேவை நிலையப் பிரதேசத்தில் இது வரை காலமும் தமது ஏக்கர் வரியை செலுத்தாத விவசாயிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. தொல்புரம் கமநலச் சேவைகள் குழு இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

(அ)


**வெஸ்லி** மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9. 30
**எங்க பாட்டன் சொத்து**

6 வது-மகளிர் வாரம்
**ஹ**... யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
**நீல மலர்கள்**

**லிடோ** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
**பூந்தளிர்**

**வெலிங்டன்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
**...ன்னப்பறவை**

**WINDSOR** JAFFNA
Daily:— 10.30, 2.00, 4.30, 7.00, 9.30
**The Gumball Rally**
Comedy — Car chase

**சாந்தி** (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
124 வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
**குரு**
பரபரப்பூட்டி காட்சியளிக்கும் கடைசி வாரம்!

**றீகல்**
(யாழ்.நகர்)
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் — லதா
நடித்த
**மீனவ நண்பன்**
20—21
**Special Delivery**
(Action Film)

**ராணி** (யாழ்.நகர்) 2 வதுஜனத்திரள் வாரம்
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி
லட்சுமி
**தங்கைக்காக**

**ஸ்ரீதர்** தினசரி: 10:30, 2:00, 4:30,
யாழ். நகர் 7:00, 9:30
Barry Newman, Shelly Winter
**CITY ON FIRE**
(More suitable for Adults)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
**நான் வாழவைப்பேன்**

**ராஜா**
(யாழ். நகர்)
**சரஸ்வதி**
[திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
**தர்ம யுத்தம்** (ஈஸ்ட்மன் கலர்)


# இன்றைய பலன்

தை மாதம் 6ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(19—1—82)

மேடம்: கனிவான சம்பவங்கள் இடம் பெறும், அபிப்பிராயபேதங்கள் மறையும், குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும், தொழில் புரியும் இடத்தில் நல்ல மாற்றங்கள் உண்டு.

இடபம்: நம்பிக்கை மோசடி நடக்கும், நண்பர்களும் காலை வாரிவிடுவர், தீர்க்கமான சிந்தனை தேவை, உடல் நலமும் பாதிக்கப்படும், தொழில்துறையில் நஷ்டம் ஏற்படும், சுமாரானதினம்.

மிதுனம்: இதயத்திற்கு இதம் தரும் செய்தி ஒன்று கிடைக்கலாம், புண்ணிய கருமங்களில் விருப்பம் மேலிடும், ஸ்தலயாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம், செலவுகள் கூடுதலாக இருக்கும்.

கடகம்: கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும், எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள், சிலருக்கு நன்மையான இடமாற்றமும் ஏற்படலாம், தெய்வத்தின் துணையும் உண்டு.

சிங்கம்: புதிய தொழில்மூலம் இலாபம் கிடைக்கும், புத்திரர்களுடைய செல்வாக்குப் பெருகும், புதுமையான எண்ணங் மனதில் வட்டமிடும், பூமியால் முன்னேற்றமும் உண்டு.

கன்னி: நடையில் தயக்கம் ஏற்படும், உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும், சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு, உடல் நலன் சிறிது பாதிக்கப்படலாம்.

துலாம்: அந்நியர்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம், வயிற்றுக் கோளாறுகளுக்கு இடம் உண்டு, உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும், சிலருக்கு நயனரோகம் தென்படும்.

விருச்சிகம்: பெரிய இடத்து சிநேகிதம் இன்று ஏற்படலாம், சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும், புதுவழிகளின்மூலம் பணம் கிடைக்கும், குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு.

தனு: அலட்சியப் போக்கினால் பல தவறுதல்களுக்கு இடமேற்படக்கூடும், பிடிவாதக் குணம் பின்தங்கிய நிலையில் தள்ளிவிடும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை விரும்பத்தக்கது.

மகரம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும், எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும், வழக்கு விவகாரங்களில் வெற்றி காணும்.

கும்பம்: வாழ்க்கையில் புதிய பாதையை உருவாக்குவீர்கள், உங்கள் அறிவுரையை கேட்பதற்கு மற்றவர்கள் தயாராக இருப்பார்கள், அரசினர் ஆதரவும் கிடைக்கலாம்.

மீனம்: வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம், உடல் நலத்தைப் பேணவும், பகைமூட்டம் தோன்றும், பதட்டமும் உடன் சேரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# ரூ. 50,000 பிணையில் லொறி அனுமதி

(புலோலி)


சோடாப்போத்தலில் சட்ட விரோதமாகக் குளிர்பானம் அடைத்து விற்பனை செய்த சம்பவம் தொடர்பாக நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த லொறியை 50,000 ரூபா பிணையில் எடுத்துச் செல்லுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட ஒருரக சோடாப் போத்தலில் சட்ட விரோதமாகக் குளிர்பானம் அடைத்து விற்பனை செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பருத்தித்துறைப்பொலிசாரினால் மு. இரத்தினசபாபதி, வே. சுகேந்திரன், பொ, பரராசசிங்கம் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டதுடன் 3600 சோடாப் போத்தல்களும் லொறியொன்றும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் மூவரும் பிணையில் விடப்பட்டு லொறியும், சோடாப்போத்தல்களும் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தன.

நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த லொறியை பிணையில் எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு கோரி சட்டத்தரணி என். கிருஸ்ணராசா பருத்தித்துறை நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்றைச் செய்திருந்தார்.

இப்பிணை விண்ணப்பம் மீதானவிசாரணைகளை மேற்கொண்ட நீதவான் லொறியை 50,000 ரூபா சரீரப்பிணையில் எடுத்துச்செல்லுமாறு உத்தரவிட்டார்.



கடந்த 11—1—82 ல் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையினால் நடாத்தப்பெற்ற மரம் நாட்டு விழாவில் மில்க்வைற் அதிபர் தென்னங்கன்றை நாட்டுவதையும், அருகில் கலாநிதி கணேசலிங்கமும், மாணவர் அவைச் செயலாளர் இராசநாயகமும், பல்கலைக்கழக மாணவரும் காணப்படுகின்றனர்.

# மீன்விற்பனைப்பெண் கொலை: வைத்திய அதிகாரி சாட்சியம்

(புலோலி)

''இறந்தவருக்கு தலையிலும் முகத்திலும் ஏற்பட்டிருந்த எட்டுக்காயங்களும நீண்ட மழுங்கிய ஆயுதத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். இவருக்கேற்பட்ட காயங்களினால் மூளை சேதப்படுத்தப்பட்டமையினாலும், இருதயம் தடைப்பட்டபடியினாலும் இவருக்கு மரணம் சம்பவித்துள்ளது''.

இவ்வாறு, துன்னாலைமீன் விற்பனைப் பெண்கொலை, கொள்ளை வழக்குவிசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் பிரேத பரிசோதனையை மேற்கொண்டமந்திகை அரசினர் வைத்தியசாலை மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் அக்டோபர் பத்தாம் திகதி காலை குடத்தனை மனற்காட்டிற்கு மீன் வாங்கச்சென்ற மீன்விற்பனைப் பெண்ணான துன்னாலை தெற்கைச் சேர்ந்த தனபாலசிங்கம் செல்லக்கிளியைப் பயங்கரமான ஆயுதமான சூலத்தால் குத்திக்கொலை செய்ததாகவும் அவர் அணிந்திருந்து 300 ரூபாபெறுமதியான தோட்டையும் வைத்திருந்த 100 ரூபா பணத்தையும் கொள்ளையடித்ததாகவும் ஆழ்வான் சரஸ்வதியைக் குத்திக்கொலைசெய்ய முயற்சித்ததுடன் அவரிடமிருந்த 400 ரூபா பணத்தைக் கொள்ளையடித்ததாகவும் குற்றம்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் பருத்தித்துறையைச் சேர்ந்த கோபால் வேணுகோபால் என்பவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். பொலிசார் சார்பில் பருத்தித்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி எஸ். திரு. திருச்சிற்றம்பலமும் பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான எஸ். சிவகுருநாதன் செல்வி. விஜயராணி மகாதேவா ஆகியோரும் ஆஜராகி இருந்தனர். எதிரிசார்பில் சட்டத்தரணிகள் ஆஜராகி இருக்கவில்லை. பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெற்றுவரும் இக்கொலை வழக்கு விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த டாக்டர் மயிலேறும் பெருமாள் குறிப்பிட்டதாவது.

பருத்தித்துறை நீதவானின் பணிப்பின் பேரிலேயே பிரேத பரிசோதனையை நான் மேற்கொண்டேன்முத்தன் மாணிக்கமும் வேலன் கந்தனும் பிரேதத்தை அடையாளம் காட்டினர் எட்டுக்காயங்கள் இறந்தவருக்குத் தலையிலும், முகத்திலும் இருந்தன. நீண்ட மழுங்கிய ஆயுதத்தால் இறந்தவருக்குக் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம். இவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் கிழிந்த குத்தப்பட்ட காயங்களாகக் காணப்பட்டன.

சூலம் ஒன்று காட்டப்பட்ட போது இச் சூலத்தின் அடிப்பக்கத்தால் அல்லது நுனிப்பாகத்தால் குத்தப்பட்டமையினால் அக்காயங்கள் ஏற்பட்டிருக்கலாம். பிரேதபரிசோதனை அறிக்கையில் காட்டப்பட்ட முதலாவதுகாயம் இறந்தவருக்கு மரணத்தை உண்டு பண்ணக்கூடிய ஒரு காயமாக இருந்தது.

அடுத்ததாக ஆழ்வான் சரஸ்வதியின் சட்டவைத்திய அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன். 10.10.81 அன்று இரவு நான் ஆழ்வான் சரஸ்வதியை வைத்திய பரிசோதனை செய்தேன். அந்த நேரத்தில் அவரின் நிலைமை மோசமாக இருந்தது அவரால் தெளிவாகக் கதைக்க முடியவில்லை. காயப்பட்டவர் தனக்கு ஒருவர் சூலத்தால் குத்தினாரென்றும் அவருடைய பெயரைத் தெரியாதென்றும் அவரைக் கண்டால் காட்ட முடியுமென்றும் கூறியதோடு சூலமென்பதை தன்னுடைய கையால் மன்றுவிரலைக்காட்டி அப்படியான ஒரு ஆயுதத்தினால் குத்தினாரென்றும் சொன்னார். காயப்பட்டவரின் உடம்பில் எட்டுக்காயங்கள் காணப்பட்டன.

''நான் இக் காயக்காரரை வைத்திய பரிசோதனை செய்த போது அவருக்கு அறிவுஇருந்தது. இந்த எட்டுக்காயங்களினாலும் ஏற்பட்ட இரத்தப் பெருக்கின் காரணமாக காயக்காரருடைய நிலைமை கவலைக்கிடமாக இருந்தது. தகுந்த நேரத்தில் தகுந்த வைத்திய சிகிச்சை அளிக்கத் தவறி இருந்தால் இக் காயக்காரர் இறந்திருப்பார். இவர் ஒரு மாதமாக வைத்தியசாலையிலிருந்து சிகிச்சைபெற்றார். இந்த ஒரு மாதகாலமும் அவர்தெளிவாகப் பேசக்கூடியவராக இருக்கவில்லை. 8.11.81 ஆஸ்பத்திரியிலிருந்து வீடுசென்றவர் மீண்டும் அதே சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது எனக்குத் தெரியும்''.

# பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

விசெட்டி வீரபத்திரசுவாமி கோவில் பாலஸ்தாபனம் நாளை புதன்கிழமையும் புனருத்தாபன சங்குஸ்தாபனம் பெப்ரவரி முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன.

## பொதுமக்கள் பீதி!

(மன்னார்)

மடு வீதியைச் சேர்ந்த ஆலங்குளம், கணேசபுரம், அகத்திமுறிப்பு, பத்து ஏக்கர் ஆகிய பகுதிகளில் யானைகளினதும் நரிகளினதும் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர்.

## பின்னுறுதிக்கட்டளைபற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

வறுத்தலைவிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா துரைராசரத்தினம் பெண் கமலாவதி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் கந்தையா துரைராசரத்தினம் — வறுத்தலைவிளான்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 119

எதிராக

பராயமற்றவர் 1. கந்தையா துரைராசரத்தினம் மகள் ஜெயந்தி — வறுத்தலைவிளான் இவர் பராயமற்றவராகவிருப்பதால் தனது வழக்கிற்கான பாதுகாவலராக நியமிக்கப்படவிருக்கும் 2ம் எதிர்வாதி மூலம்.

2, நாகரத்தினம் தவேந்திரன்—வறுத்தலைவிளான் எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு மார்கழி மாதம் 11ஆந் நாளன்று முற்பகல் 9.00மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி

சு. வ. கணேசன்,
பதிவாளர்.

1981ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3 ஆந்நாளன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது:

கெ. இராமலிங்கம,
மனுதாரின் சட்டத்தரணி
11. 12. 81

காரணம் காட்டும் காலம் 29—1—1982 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சு. வ. கணேசன்
1972 பதிவாளர்

## குறிகாட்டுவான் துறை ஊடாக பாகிஸ்தானுக்கு 2வது கட்ட உப்பு ஏற்றுமதி

(நயினாதீவு)

குறிக்காட்டுவான் துறைமுகத்தினூடாக இரண்டாவது தடவையாக உப்பு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. குறிஞ்சாத்தீவிலிருந்துகொண்டுவரப்பட்ட சுமார் 3000 தொன் உப்பு இப்போது ஏற்றுமதியாவதாகத் துறைமுகப் பொறுப்பாளர் தெரிவித்தார்.


சிங்கப்பூர் கப்பலான 'கோட்வாதர்' என்ற கப்பலே பாகிஸ்தானுக்கு உப்பு ஏற்றுமதியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. காலநிலைசீர்கேடு காரணமாகக் காங்கேசன்துறைத் துறைமுகத்தைக்கப்பல் வந்தடைவதில் ஏற்பட்ட சிரமத்தினாலேயே இத் துறைமுகம் ஏற்றுமதி உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(அ)

## 'எக்காலத்திற்கும்உரியவராக கிறிஸ்து துலங்குகிறார்''

(யாழ்ப்பாணம்)

''இறைமகன் யேசுக் கிறீஸ்து வரலாற்றின் சின்னம் எழுச்சியின் அடையாளம், மறுமலர்ச்சியின் உருவகம் இறைவனுக்கும் மனிதருக்கும் மற்றும் மனித சமுதாயத்தினுள்ளும் நிலவவேண்டிய அருள் உறவின் உயிரூட்டமுள்ள சின்னமே கிறீஸ்துவின் வார்த்தைகளும் அவரது வாழ்க்கையும் அவரது வார்த்தைகள் அள்ள அள்ளக் குறையாத செல்வம் எனவே அவர் காலத்தையும் அனைத்து வரைவிலக்கணங்களையும் கடந்தவராக எக்காலத்திற்கும் எல்லாமனிதருக்கும் உரிய உயிர்தரும் சின்னமாகத் துலங்குகிறார். அவரது வாழ்வையும் வார்த்தைகளையும் சிறைப்படுத்தவோ சிலையாக்கவோ முடியாது.



அருட்திரு சந்திரகாந்தன் அடிகளார்

இவ்வாறு கிறீஸ்து நாதரின் ஜயந்தி விழாவையொட்டி யாழ், திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்யசாயிசேவா சமித்தி மண்டபத்தில் ஆற்றிய அருளுரையின்போது சாந்சேவியர் குருத்துவக்கல்லூரியின் தத்துவ சாஸ்திரப் பேராசிரியரும் யாழ். பல்கலைக்கழகக் கிறீஸ்தவ நாகரீகத்துறையின் விரிவுரையாளருமான அருட்திரு ஏ. ஜே. வி, சந்திரகாந்தன் அடிகளார் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது அன்பிலே அடித்தளமிடப்பட்டு சகோதரத்துவத்திலே கட்டி எழுப்பப்பட்டு சேவையினால் முழுமை பெறும் மனித சமுதாயமே கிறீஸ்துவினால் எதிர்பார்க்கப்பட்ட சமுதாயம் உலகிலுள்ள அனைவருக்காகவும் தமது உயிரை மனமுவந்து கொடுத்த கிறீஸ்துவின் வாழ்வு உலகம் அனைத்திற்குமே புத்துயிரும் புதிய உணர்வும் தரும் உயிரூட்டம் நிறைந்த சின்னம் எனவே சாதி, மத, மொழி வேறுபாடின்றிக் கிறீஸ்துவின் பாதையை எவரும் பின்பற்றலாம்,

வண. பிதா சந்திரகாந்தனின் அருளுரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய சமித்தித் தலைவர் திரு. எல். சிவஞானம் கிறீஸ்துவின் போதனைகளுக்கும் பகவான் ஸ்ரீசத்யசாயின் போதனைகளுக்கும் நெருங்கிய தொடர்பும் ஒற்றுமையும் இருப்பதாகக் கூறினார்.

தொடர்ந்து பஜனைப்பாடல்களும் அமுதவாக்கும் தியானமும் நடைபெற்றன ஏராளமான பக்தர்களும் பவ இந்து அறிஞர்களும் இவ்விழாவிலும் தொடர்ந்து நடைபெற்ற வழிபாட்டிலும் பங்கு பற்றினார்கள்.

(மா)

## உலக சுவிசேஷ சங்க மாநாடு

(அரியாலை)

பங்களூரில் அகில உலக சுவிசேஷ சங்கத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் மிஷனறி மகாநாட்டில் இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி ஸ்தாபன நிர்வாகி சகோதரர் சாம் சி. தேவபாலசிங்கமும் அவரது பாரியாரும் இலங்கைப் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். இம் மகாநாடு ஜனவரி மாதக் கடைசிப் பகுதியில் பங்களூரில் நடைபெறவிருக்கிறது, (க)

## பாடசாலைகளில்—

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வருடம் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நடாத்தப்பட்ட திடீர் பரிசோதனைகளின்போது சாவகச்சேரி கல்வி வட்டாரத்திலுள்ள ஆசிரியர் ஒருவரும், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விகிதர் ஒருவரும் தற்காலிக வேலைநீக்கத்துக்குள்ளாகியதுடன் புங்குடுதீவு கல்வி வட்டார ஆசிரியை ஒருவர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வீமன்காமம் மகாவித்தியாலயம் மனையியல் கூடத்தில் திருட்டு! சிறுவர்கள் கைவரிசை

(மாவிட்டபுரம்)

பாடசாலை மனையியல் கூடம் உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ள அதே நேரத்தில் இத்திருட்டை நடத்தியவர்களில் ஒருவர் அகப்பட்டதுடன் திருட்டுப் பொருட்களும் அவரிடமிருந்து மீட்கப்பட்டன.

வீமன்காமம் மகாவித்தியாலய மனையியல் கூடமே இவ்வாறு உடைக்கப்பட்டு திருட்டு இடம் பெற்றுள்ளது.

இங்கு திருட்டில் ஈடுபட்ட இரு சிறுவர்கள் திருட்டுப் பொருட்களை பார்சலாகக் கட்டிக்கொண்டு தெல்லிப்பழை புகையிரத நிலையம்வரை சென்று அங்கிருந்து புகையிரதத்தில் ஏறத் தயாரானார்களாம். அப்போது புகையிரத நிலைய ஊழியர் சந்தேகம் கொண்டு விசாரிக்கவே ஒருவர் ஓடித் தப்பிவிட்டாராம். மற்றவர் பொருட்களுடன் அகப்பட்டுக்கொண்டார்.

இச்சிறுவனும், பொருட்களும் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், தப்பியோடியதாகக் கூறப்படும் சிறுவனைத் தேடிக் கண்டுபிடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

## வெளிநாட்டு வேலைமோகம் உயிரைப் பறித்தது!

(மாவிட்டபுரம்)

வெளிநாட்டு வேலைமோகம் வாலிபர் ஒருவரது உயிரைப் பறித்த சம்பவம் மாவிட்டபுரத்தில் நடந்துள்ளது. சபாரத்தினம் ஜெயச்சந்திரன் (28 வயது) என்பவரே இவ்வாறு மரணத்தைத் தழுவியவராவார்.

வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்ல ஆசைப்பட்ட இவர், தமது அண்ணனிடம் பணம் கேட்டதாகவும் பணம் கிடைக்காததால் கவலைகொண்டிருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## போட்டியின்றி மீண்டும் தெரிவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக ஆசிரியர் திரு. எஸ். இராசநாயகம் மீண்டும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இளவாலை புனித ஹென்றி யரசர் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றும் திரு. இராசநாயகம் சங்கத்தின் நிதிநிலைமை மிகவும் மோசமாக இருந்ததொரு காலகட்டத்தில் கடந்த ஆண்டு தலைவர் பதவியைப் பொறுப்பேற்றுச் சங்கம் திறம்பட இயங்குவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் என்று பலராலும் பாராட்டப்பட்டவராவர். சங்கத்தின் உபதலைவராக திரு. வி. சேனாதிராசா தெரிவுசெய்யப்பட்டார். (அ)

## நயினாதீவில் வெங்காயப்பயிர் அமோக விளைச்சல்

(நயினாதீவு)

நயினாதீவு விவசாயிகள் தற்போது வெங்காய அறுவடையை மேற்கொண்டுள்ளனர். கடந்த வருடத்தைக் காட்டிலும் இங்கு வெங்காய விளைச்சல் கூடுதலாகக்காணப்படுகிறது. ஆரம்பத்தில்அறுவடையை ஆரம்பித்தவர்கள் கூடுதலான விலையில் அவற்றைச் சந்தைப்படுத்தினார்கள். தற்போது தீவின் பல பகுதிகளிலுமிருந்து சந்தைக்குவெங்காயம் வரத்தொடங்கியுள்ளதால் விலைசற்றுக்குறைவடைந்துள்ளது.

பெருமளவு விளைச்சலைப் பெற்றவர்கள் உச்சவருமானத்தைக்கருதி அவற்றைக் கொழும்புக்கு அனுப்பிவருகிறார்கள். (அ)

## கொழும்பு திருச்சபை முதலிடம்

(அரியாலை)

கொழும்பு கிறிஸ்தவ தமிழ் கலா மன்றத்தினால் ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைக்கிடையே கிறிஸ்து ஜனன விழாவையொட்டி நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் தென்னிந்திய ஆதீனத்தின் கொழும்புத் திருச்சபை 18 புள்ளிகளைப் பெற்றுகேடயத்தைக் கைப்பற்றியது.

கொழும்பிலுள்ள 9 திருச்சபைகளின் ஓய்வநாட் பாடசாலைப் பிள்ளைகள் கலந்து கொண்ட இப்போட்டிக்கு பிரதம அதிதியாக இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி ஸ்தாபன இயக்குநர் சகோதரர் சாம். சி. தேவபாலசிங்கமும், அவரது பாரியாரும் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை திருமதி. றெஜினா தேவபாலசிங்கம் வழங்கினார்கள். (அ)

## பரியோவான் வெற்றி

(அரியாலை)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த கொழும்பு வடக்கு மருத்துவ கல்லூரிக் கோஷ்டி, யாழ். பரி.யோவான் கல்லூரி முதலாவது பிரிவுக் கிரிக்கட் கோஷ்டியுடன் பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் விளையாடிய 40 ஓவர் கிரிக்கட்போட்டியில் பரி.யோவான் கல்லூரிக் கோஷ்டி 3 விக்கட்டுகளாலும் 110 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது. (இ)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

சுன்னாகம் அரசினர் வைத்திய சாலையில் சுடந்த நான்கு ஆண்டுகளாக பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் எஸ், பத்மநாதன் இம் மாதம் தொடக்கம் ஏறாவூர் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யபபட்டுள்ளார். (அ)


1982-ல் உங்கள் பலன் எப்படி?

வாசியுங்கள்!

சோதிட மலர் (தைமாத இதழ்)

பூபாலசிங்கம் புத்தகசாலை மொத்த விற்பனையாளர் யாழ்ப்பாணம்.

வெளியீடு:

கிருக்கணித நிலையம்

மட்டுவில் — சாவகச்சேரி. 2015



வடமாகாண மக்களின் அபிமானத்தைப் பெற்ற நிறுவனம்—
உங்கள் பழுதடைந்த மணிக்கூடுகளை நல்ல முறையில் திருத்திக் கொள்வதற்கும்; அசல் இங்கிலிஷ் உப உறுப்புக்களை பொருத்திக் கொள்வதற்கும் நம்பகமான ஒரே நிறுவனம்.

டில்கா வாச் வேக்ஸ்

DILKA WATCH WORKS — OPPOSITE BUS STAND JAFFNA.

பஸ் நிலையம் முன்பாக
202, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
போன: 8174

### இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண

# சமாதானகுழு அமைப்பதில் புதிய முயற்சி நடக்கிறது

(பச்சிலைப்பள்ளி நிருபர்)

இலங்கையில் தமிழ்—சிங்கள இனங்களிடையே நிலவி வருப பிரச்னையை அரசியலுக்கப்பால் கல்விமான்கள், சமயப் பெரியார்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்றினை அமைத்துப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகாண்பதற்கும், இனங்களிடையே ஐக்கியத்தை நிலைநாட்டுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகஅறியப்படுகிறது.

இச் சமாதானக் குழுவினை அமைப்பதில், முன்னாள் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரும், தற்போது ஏடனில் ஐக்கியநாடுகள் சபையில் சமூகவியல் ஆலோசகராக இருப்பவருமான திரு. க. சச்சிதானந்தம் அதிக அக்கறைகொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இப் பிரச்னை சம்பந்தமாக நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு வெளிநாட்டிலுள்ள சில அறவழி ஸ்தாபனங்களும் தமது ஆதரவினை வழங்குலாம் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

கடந்த கால்நூற்றுண்டாக இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்னைக்கு அரசியல் ஸ்தாபனங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகள் எதுவித பயனையும் அளிக்கவில்லையெனவும் அது எதிர்மாறாகப் பிரச்னையை சிக்கலாக்கியுள்ளதாகவும் எனவேதான் அரசியலுக்கப்பால் இரு இனங்களுக்கிடையே உள்ள சமயப் பெரியார்கள், கல்விமான்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்றை அமைத்துப் பேச்சுவார்த்தை நடத்தப் படவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

சிங்களஇனத்தின் சார்பில் கத்தோலிக்க பிஷப் ஒருவரும் இப் பேச்சுவார்த்தையில் முக்கிய இடம்வகிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## அன்னமிட்ட வீட்டில் கன்னக்கோல்!

(யாழ்ப்பாணம்)

வீட்டுவேலைக்கு அமர்த்தப்பட்ட இளம்பெண், அவ் வீட்டிலேயே பல பொருள்களை அபகரித்துக்கொண்டு தப்பியோட முயற்சிக்கையில் வீட்டு அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த கே. ஜி. என். ஏ. பெரேரா என்பவர் கொழும்பிலிருந்து தமது குடும்த்துடன் தெல்லிப்பழையிலுள்ள தமது வாடகை வீட்டுக்கு வந்துகொண்டிருந்த போது சரோஜாதேவி (17 வயது) என்ற இளம்பெண் இவர்களைச் சந்தித்து தமக்கு வேலைதரும்படி கேட்டாராம்.

இப் பெண்மீது இரக்கம் கொண்ட அக் குடும்பத்தினர் தங்களது வீட்டில் இவரை பணிப்பெண்ணாக அமர்த்தினராம்.

நேற்றுமுன்தினம் பகல் வீட்டுக்காரர் இல்லாத நேரம் பார்த்து இப்பெண் வானெலி, மற்றும் துணிவகைகளை எடுத்து ஒரு பையில் வைத்துக்கொண்டு தப்பியோடிவிட்டாராம்.

பின்னர் இவர் அயலவர்களின் துணையுடன் பிடிக்கப்பட்டு, சுன்னுகம் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர். (மா)

# இப்படியும் நடக்கிறது

யாழ். மாவட்ட அபிவிரு ... டம ... அலுவலகமா? ... ஒரு ந

இச்சபை தோன்றிய காலத்தில், சபையின் அலுவலகம் யாழ். செயலகத்தில் கீழேயும், தலைவரின் அலுவலகம் மேல் மாடியிலும் இருந்தது. பின்னர் தலைவரின் அலுவலகம் திடீரென மேல் மாடியில் வேறு இடத்துக்கு நகர்த்தப்பட்டதும், இதனைத் தொடர்ந்து சபையின் அலுவலகமும் மேல்மாடிக்குத் தாவி, தலைவரின் அலுவலகத்துக்குப் பக்கத்தில் இடம்பிடித்துக் கொண்டது.

கதை இத்துடன் முடியவில்லை.

சபைத் தலைவரின் அலுவலகம் மேல்மாடியில் இருக்க, சபை அலுவலகம் அண்மையில் திடீரென கீழே வந்துவிட்டது. அதுமட்டுமல்ல; அலுவலகம் பல பிரிவுகளாக 'குட்டிகளும்' போட்டுள்ளது!

விஷயம் இத்துடன் முடியவில்லை. தலைவரது அலுவலகத்துக்கு மட்டும்தான் விளம்பர பெயர்ப்பலகை உண்டு. சபை அலுவலகத்துக்கு பெயர்ப் பலகையும் இல்லை; தொலைபேசியும் இல்லை!

— ஊடுருவி

## சென்னைகிரிக்கட்டெஸ்டிலும் வெற்றி தோல்வி இல்லை

சென்னை, ஜன 18

சென்னையில் நடைபெற்ற இந்திய—இங்கிலாந்து 5 வது கிரிக்கட் டெஸ்டும் வெற்றி தோல்வியின்றிமுடிவடைந்தது.

முதல் இன்னிங்ஸில் அபாரமாக ஆடி 222 ஓட்டங்களைப் பெற்று இந்திய வீரர்களில் ஆகக்கூடுதலான ஓட்டங்களைப்பெற்ற சாதனையை நிலைநாட்டிய குண்டப்பா விஸ்வநாத் இந்த டெஸ்டின் சிறந்த வீரருக்கான பரிசைப்பெற்றுள்ளார். இவருடன் சேர்ந்து ஆடிய யஷ்பால்சர்மா 140 ஓட்டங்களைப் பெற்றதும் இங்கிலாந்து வீரர் கிரஹம் ஹூச் 127 ஓட்டங்களைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்கோர் விபரம் இந்தியா 481—4, 160—3. இங்கிலாந்து 328

6வது இறுதி டெஸ்ட் இம் மாதம் 30ம் திகதி கான்பூரில் ஆரம்பமாகிறது. (இ)

## தொழில்நுட்ப யுகத்தில் சாதிபேதத்துக்கு இடமில்லை!

### சுப்பிரமணியசுவாமிகள் வலியுறுத்துகிறுர்

[சுழிபுரம்]

''தொழில் நுட்ப யுகத்தில் சாதிப்பாகுபாடுகளுக்கு இடமில்லை. தொழிலுக்கு அது அடிப்படையுமில்லை. சமயத்தைச் சரியாகப் பின்பற்றினுல் எங்கள் துயர்களுக்கு நிவிர்த்தி உண்டு. இளம் பிள்ளைகளுக்கு ஒழுக்க வாழ்க்கையை நெறிப்படுத்த வேண்டியது எங்களது பெருங்கடமையாகும்''

இவ்வாறு அமெரிக்காவிலிருந்து வருகை தந்துள்ள ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அருளுரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு வருகை தந்த சுவாமிகளையும் அவரது சிஷ்யர்களையும் வழக்கம்பரை சன சமூக பஜனை சபையினர் வரவேற்றனர். சுவாமியை பல நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு நின்று வரவேற்று ஆசீர்வாதம் பெற்றனர். இளைப்பாறிய அரசாங்க அதிபர் திரு. சோ. அருணசலம் தலைமையில் அருளுரைநிகழ்ச்சி நடைபெற்றது.

சுவாமிகள் தொடர்ந்து பேசுகையில்; 'உலகின் பல பாகங்களிலும் இந்துக்கோவில்கள் இருக்கின்றன. இந்து சமயத்தை அறிவது மிகவும் சிக்கலானது. சமயங்கள் ஒரே உண்மையைப் போதிக்கின்றன. உலகத்தில் உள்ளவை யாவும் கடவுளின் படைப்பு. சிவம் அன்புத்தெய்வம்; எமது துன்பத்தை தீர்ப்பவர்- அவர் துன்பங்களைத் தருபவர் அல்லர். எமது துன்பத்திற்கு நாங்களே காரணம். இறைவன் அவற்றைத் தீர்ப்பார்'' என்றுர்.

அருட்புலவர் பண்டிதர் அ. ஆறுமுகம் வரவேற்புரை நிகழ்த்துகையில், ''1200 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மாணிக்கவாசக சுவாமிகளை ஆசீர்வதித்து அருள்புரிய பரமசிவன் நடாத்திய வரலாற்றையெல்லாம் நாம் அறிவோம். அதே போல் இன்று எங்களை எல்லாம் ஆசீர்வதித்து அருள்புரிய ஸ்ரீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தமது சிஷ்யர்களுடன் வருகை தந்திருக்கின்றுர்கள். எங்கள் தவஞானியாகிய யோகர் சுவாமிகளின் சிஷ்யரான அவர் உலகெல்லாம் வாழும் முப்பது கோடி இந்துக்களையும்கண்டு சைவ சமயப் பேருண்மைகளை அனைவரும் அறிந்துஉய்யவழி காட்டுகின்றுர்'' என்றுர்.

சபைச் செயலாளர் திரு. க. வாமதேவன் நன்றியுரை கூறினுர்.

## இளம் மனைவி தற்கொலை

(வவுனியா)

தைப்பொங்கலை தாய் வீட்டில் கொண்டாட கணவன் அனுமதிக்காததால் பெரியப்பன் செல்வராணி (வயது 19) எனும்இளம்மனைவி தற்சொலை செய்துகொண்டார்.

சாஸ்திரி கூழாங்குளம்எனும் இடத்தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் நிகழ்ந்தது.

பிரேத பரிசோதனையை வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி சோமசுந்தரம் நிரஞ்சன் மேற்கொண்டார். விசாரணையின்போது இறந்தவர் ஏழு மாதங்களுக்கு முன்னர்தான திருமணமானவர் என்று தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணை அதிகாரி திரு. செ. பத்மநாதன் விசாரணைநடுவில் தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

## புதிய மாணவர்களுக்கு இன்முகவரவேற்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினா ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு ஆரம்ப ஆசிரிய பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவ ஆசிரியர்களை இறுதிஆண்டு மாணவ ஆசிரியர்கள் நேற்று இன்முகத்துடன் வரவேற்றனர்.

மனையியல், இந்துசமயம், தமிழ், சமூகக்கல்வி இசை ஆரம்பக்கல்வி ஆகிய பாடநெறிகளுக்கு நாட்டின் பல பாகங்களிலுமிருந்து சுமார் 200க்கும் மேற்பட்டவர்கள் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மகளிர் விடுதியில் மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம் உட்பட தூர இடங்களைச் சேர்ந்த ஆசிரியைகளுக்கு முன்னுரிமை வழங்க கல்லூரி முதல்வர் திருமதி ஆனந்தக்குமாரசாமி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

## கோவிலுக்குப் புறப்பட்ட மூதாட்டி கிணற்றுக்குப்பலி!

(பண்டத்தரிப்பு)

காலையில் கோவிலுக்குப் போவதற்காகக் கிணற்றடிக்கு முகம் கழுவுவதற்காகச்சென்ற 75 வயது மூதாட்டி கிணற்றுக்குப் பலியானுர். இப்பரிதாப சம்பவம் இளவாலையில் நடைபெற்றுள்ளது. இளவாலையைச் சேர்ந்த அதிரியாம்பிள்ளை அன்னம்மா என்ற இம் மூதாட்டியின் மரண விசாரணை பண்டத்தரிப்பு பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் முன்னிலையில் நடைபெற்றது.

சம்பவ தினத்தன்று காலையில் இளவாலையிலுள்ள தேவாலயம் ஒன்றுக்கு காலமானவர் செல்வதற்கு புறப்பட்டதாகவும் அப்போது தள்ளாத வயதில் கோவிலுக்கு போகவேண்டாம் என்று வீட்டிலுள்ளோர் அவரைத் தடுத்ததாகவும், அதை அவர் கேளாது கோவிலுக்குப் போவதற்காக முகம் கழுவுவதற்குக் கிணற்றடிக்குச் சென்றதாகவும் தண்ணீர் அள்ளுகையில் தவறி கிணற்றினுள் விழுந்ததாகவும்,விழுந்த சத்தம் கேட்டு வீட்டிலுள்ளோர் ஓடிச்சென்று அவரைக் கிணற்றினுள்இருந்துவெளியே தூக்கியபோது அவரது உயிர் பிரிந்துவிட்டதாகவும் மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் விபத்து மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினுர். சாட்சிகளை காங்கேசன் துறைப் பொலிசார் ஆஜர் செய்தனர். (அ)

## விபத்தில் ஒருவர்காயம்

(வவுனியா)

வவுனியா கச்சேரிச் சந்தியில் நேற்று மாலை நிகழ்ந்த விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கண்டி வீதி வழியாக வந்து கொண்டிருந்த மினி பஸ்ஸும் யாழ். வீதி வழியாக வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்துள்ளார்.

## தண்டனையை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லோகநாதன் என்பவர், ஏற்கனவே இரு வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்பட்டு 18 மாதம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இவர் மீண்டும் கடந்தமாதம் 24ம் திகதி ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கனகசபை குணரத்தினத்துக்குச் சொந்தமான லொறி 'ஜாக்' ஒன்றை திருடியதாக யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

யாழ் நீதிமன்ற நீதவான் ரி. ஜோகநாதன், இவ்வழக்குக்கு 1 வருடக் கடூழியச் சிறையுடன் மொத்தம் 30 மாதக் கடூழியச்சிறைத்தண்டனைவிதித்தார். (மா)

## வெளிநாட்டு வேலைமோசடி ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி 14,400 ரூபா மோசடிசெய்த ஒருவரை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

நீர்வேலியைச்சேர்ந்த சார்ள்ஸ் ஜோசப் என்பவர், வெளிநாட்டில் வேலைபெற்றுத் தருவதாக கோண்டாவில் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த வி. யோகராசா என்பவரிடமிருந்து தெமட்டகொடையில் வைத்து 14,400 ரூபாவும்,யாழ்ப்பாணத்தில்வைத்து 1500ரூபா பெறுமதியான சைக்கிளையும் வாங்கி மோசடி செய்ததாக பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

தெமட்டக்கொடையில் வைத்துப் பணம் பெற்றதற்காக கொழும்பு நீதிமன்றத்திலும், யாழ்ப்பாணத்தில் வைத்து சைக்கிள் வாங்கியதற்காக யாழ். நீதிமன்றத்திலும் சந்தேகநபர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸ் புலனுய்வுப் பகுதி சார்ஜன்ட் ஜி. பிள்ளை சந்தேகநபரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார். இம்மாதம் 28ம் திகதி வரை அவர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (மா)

## பரந்தன்...

(1ம் பககத் தொடர்ச்சி)

உதவியுடன் சட்டத்தரணி கனக மனேகரனும் அரசதரப்பில் சட்டத்தரணி ஐ. ஞானதாசனும் ஆஜராகியிருந்தனர்.

தமிழ் ஜூரிமார் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைகள் நடைபெற்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆ ஜனவரி மீ 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.